View metadata, citation and similar papers at core.ac.uk

brought to you by CORE

provided by International Research Journal of Tamil

RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt1

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் உணர்த்தும் அரசியல் அறம்

**பா.கனிமொழி** [அ,*]

[அ] தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர் - 626001, இந்தியா.

# Political Dhamma explained by eighteen Lesser Texts

**B. Kanimozhi** [a,*]

[a] Department of Tamil, V.V.Vanniaperumal College for Women, Virudhunagar, Tamil Nadu 626001, India

***Corresponding Author**
kanimozhi@vvvcollege.org

Received : 09-11-2018
Accepted : 06-01-2019

**ABSTRACT**

When it comes to political affairs, it is necessary to be familiar with the various dictionaries, encyclopaedias, and commentaries on politics. The basic politics of society, their relevance, the origins of the state, the work of the state, the various forms of governance in the history of mankind, the welfare of the people, how they should act, the Government or Emperor qualifications, characteristics and the crimes and grievances of the state.

**Keywords:** Political, Society, State, Welfare



புதுச்சேரியைச் பிறப்பிடமாகக் கொண்ட **முனைவர் பா. கனிமொழி** அவர்கள் புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் முழுநேர முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்துள்ளார். 2018 முதல் விருதுநகர் வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரியில் (தன்னாட்சி) தமிழ்த்துறை உதவிப்பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் ஒரு சிறந்த தமிழ் ஆர்வலராகவும், திறனாய்வாளராகவும் அறியப்படுகிறார். காவ்யா, புதிய உறவு, காற்றுவெளி, பதிவுகள், முத்துக்கமலம் போன்ற தமிழ் இலக்கிய இதழ்களில் கவிதையும் கட்டுரையும் எழுதித் தமிழுக்குத் தனது பங்களிப்பினைச் செய்து வருகிறார். இதுவரை 30 மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கும் இவர், கடந்த 2016 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும், இந்திய ஆய்வியல் துறை மலாயாப் பல்கலைக்கழகமும், சென்னை கலைஞன் பதிப்பகமும் இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு விழாவில் 'திறனாய்வு நோக்கில் அறஇலக்கிய காலப்புலவர் கணிமேதாவியார் படைப்புகள்' என்னும் நூலினை வெளியிட்டுள்ளார். இந்தியப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பணிபுரிவதற்காக மத்திய மாநில அரசுகள் நடத்திய தகுதித்தேர்வுகளில் (NET, SET, CICT JRF) தேர்ச்சி பெற்றுள்ளார். தொடர்ந்து தமிழ் கலை மற்றும் இலக்கிய வெளியில் பயணித்து வரும் இவருக்கு, கடந்த 2018 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் இயங்கும் இந்திய கல்விசார் ஆய்வாளர்கள்

அமைப்பு தமிழாய்வுச் சங்கமம் விருதுகள் வழங்கும் விழாவில் இவருடைய தமிழ்ப்பணியைப் பாராட்டி 'திருவள்ளுவர் விருது' வழங்கிச் சிறப்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## அரசியல் - விளக்கம்

"அரசியல் என்பது ஆட்சி, அதிகாரம் பற்றிய கோட்பாடுகளும், நடைமுறைகளும் எனவும், அரசு என்பது ஒரு நாட்டை அல்லது ஒரு மாநிலத்தை நிர்வகிக்கும் அதிகாரங்கள் வரையறைக்கப்பட்ட அமைப்பு" [1] **(க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.ப.56)** எனவும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது.

"அரசியல் என்பது முடிவெடுப்பதற்கான அதிகாரம் (power to decide) யார் கையில் இருக்கிறதோ அவர் அரசியல் நிலைப்பாடு எடுக்கிறார்அனைவரும் கலந்துபேசி ஒரு முடிவு . எடுத்தால் அது ஜனநாயக(Democracy) அரசியல் என்றும், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனிநபரோ, தனிக்குழுவோ முடிவு செய்தால் சர்வாதிகார அரசியல் என்றும் கூறுவர். [2] **(செபமாலைராசா.ப .சமுதாயப் பகுப்பாய்வு .71 )**

மேற்குறித்த கருத்தியல் அரசுக்கு அதிகாரத்தைக் கட்டமைக்கிறதுஅவ்வதிகாரத்தின் . அரசனுடைய எந்தச் .கீழ் வாழும் மக்கள் அரசுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள் செயலும் மக்களின் உரிமையையோ, இருப்பையோ உணர்ந்து செயல்படுவதாகத் தெரியவில்லைதனிநபர் ஆதிக்க அரசியலையே அரசியல் விளக்கங்கள் . எடுத்துக்காட்டுகின்றன

## அறம் சொற்பொருள் விளக்கம் -

"அறம் என்ற சொல்லானது 'அறு' என்ற வினைச்சொல்லையும், 'அம்' என்ற தொழிற்பெயர் தொகுதியையும் கொண்டு தோன்றியதாகும் அறு) .x அம் = அறம் ('அறம்' என்னும் அடிச்சொல்லிற்கு 'அறுத்துச்செல்' 'வழியை உண்டாக்கு', 'உருவாக்கு', 'துண்டி', 'வேறுபடுத்து' எனப் பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றனஇத்தகைய . சொல்லமைப்பியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட இழுக்க முறைகளின் தொகுதியே - முழு நிறைவடிவமே அறம் என்று கூறுவர்" [3] **( திருநாவுக்கரசு.ப.திருக்குறள் நீதிஇலக்கியம் .த.க.38 )**

"Ethics' என்ற சொல்லானது வேர்ச்சொல்லியலின் படி 'Ethos' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும் அச்சொல் முதலில் .மக்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்த இடம் என்ற பொருளைக் குறித்ததுநாளடைவில் இச்சொல்லிருந்து பல பொருள்கள் . அவற்றில் பழக்க வழக்கம் .வழங்கப்படலாயின, மனநிலை, குணம், சிந்திக்கும் முறை உள்ளிட்ட பல பொருள்கள் அடங்கும்"[4]**( Ethics progress publishers, Moscow 1989.p.5 )**

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்டதோடன்றி, அவ்வக் காலத்தில் ஆளுவோர், சமயங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவை வகுத்துக் கொடுத்தவையும் அறம் எனப்பட்டன" [5] ( **சுதமிழில் அறஇலக்கியங்களும் .மாதவன்., பௌத்த சமணஅறங்களும்.ப.39)** என்பது கருதத்தக்கது . "தமிழிலக்கியங்களில் 'அறம்' என்ற சொல் ஒழுக்கம், உயர்ந்தோர் வழக்கு, நடுவுநிலைமை, நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் போன்ற பொருள்களில் வழங்கி வருவதைக் காணமுடிகிறது."[6] ( **சுதமிழில் அறஇலக்கியங்களும் .மாதவன்., பௌத்த சமணஅறங்களும்.ப.24)** கழகத்தமிழ் அகராதி இச்சொல்லுக்கு, "கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை, தீப்பயனுண்டாக்குஞ்சொல் ஆகிய பொருள்களைத் தருகிறது."[7] ( **கழகத்தமிழ் அகராதி)** இவ்வாறு அறம் என்பது பல்வேறு வகையான பொருள்கோடல்களுக்கும், சொற்குறிப்புகளுக்கும் இடந்தரும் நெகிழ்வுத் தன்மையுடையது என அறம் குறித்து மேற்கண்ட அறிஞர்கள் பலர் விளக்கியுள்ளனர்.

## அறவியல்

"அறவியல் என்பது சமூகத்தின் இயக்கப்போக்கிலிருந்து தன்னியலாக உருவாகி வளர்ந்த கோட்பாட்டைக் குறிப்பதாகும்இதன் தோற்றம் ., உருவாக்கம், கட்டமைப்பு, வளர்ச்சிநிலை ஆகியவை சமூக இயங்கியலின் விளைச்சல்களாகும்வாழ்க்கை . நெறிச்சிதைவுகளிலிருந்து புதிய ஒழுங்கமைப்புக்குட்பட்ட ஒள்ளிய வாழ்க்கை முறையை இத்தேவையை நிறைவுசெய்வதற்கான .உருவாக்க வேண்டிய தேவை சமூகத்துக்கு இருந்தது சிந்தனைக்கூறுகளின் தோற்றுவாயாய் பல்வேறு சமயங்களும், இலக்கியங்களும் அமைந்திருக்கும் பாங்கு, இவற்றின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சிநிலையாகவும் அறஇலக்கியங்களையும், மெய்யியல் பிரிவுகளையும் கருதலாம்இவை மானுட . வாழ்வியலின் அனுபவ விளைச்சலால் அமைந்த படிநிலைக் கட்டங்களின் தன்மையை .விளக்குவதாகவும் அமையும்"[8] **( bUniversal Dictionary.p.527 )**

## அறத்தின் இயல்புகள்

| | |
|---|---|
| அறுத்துச்சொல் | இயற்கையான போக்கைக் கைக்கொள்ளுதல் - |
| வழியை உண்டாக்குதல் | சமூகத்தேவைகளை நிறைவுசெய்யும் வழிவகைகளை - உண்டாக்குதல் |
| உருவாக்கு | புதியன உருவாக்குதல் - |
| துண்டி | அல்லன விலக்கி நல்லன கொள்ளல் - |
| வேறுபடுத்து | ஏற்பும் எதிர்ப்பும் தேர்தல் - |

மேற்கண்ட இவ்வைந்து இயல்களால் தான் அறம் விளைகிறது என்பது பல்வேறு அறிஞர்கள் தரும் கருத்தாக விளங்குகிறது.

## அரசு

'அரசு' என்ற சொல்லுக்கு 'அரசர்', 'இராச்சியம்', 'அரசியல்', 'அரசாட்சி' என்ற பொருள்கள் தமிழ் - தமிழ்) அகரமுதலிஅரசன் என்பது நாடாள்வோன் என்னும் .வழங்கப்படுகின்றன ( தலைமையையும், இராச்சியம் என்பது ஆளப்படும் பகுதி என்ற 'இடம் அல்லது நிலத்தையும்', அரசியல் என்பது அரசாளும் முறை என்ற 'பண்பினையும்' அரசாட்சி என்பது 'அரசு நிர்வாகம்' என்ற கருவியையும் குறிப் (தலைமையின்)பன என்பர்" [9] ( **இராஜமுத்திருளாண்டி, இலக்கியத்தில் மனித உரிமைகள்.ப .33-34** ) என்று பேராசிரியர் இராஜமுத்திருளாண்டி அரசு சார்ந்த பன்முகத் தன்மையினை விளக்குகிறார்மேலும் ., அரசியல் என்பது சமூகத்தின் ஓர் அங்கமாகும்அச்சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு அரசியலும . ஆளாதல் அவசியமாகும் . அரசின் தோற்றம், அரசு நிறுவனங்கள், மக்களிடம் வரி பெறும் முறை, படைவீரர், பகைத்திறம், பொருளாதாரம், சாதியமைப்பு போன்ற பல்வேறு கூறுகளும் இவற்றில் அடங்கும் .

"தனிநபர்கள் புதிதாகச் சேர்த்த சொத்தைப் பாதுகாக்கவும் அதைப் பெருக்குவதற்கும் படிப்படியாய் வளர்ந்து வரும் புதிய வடிவங்களுக்கும் பொதுமக்கள் அங்கீகாரம் எனும் முத்திரையைப் பதிய வைப்பதற்கும் வேண்டிய ஒரு நிறுவனமாக இல்லாதிருந்தது . சமுதாயத்தில் எழுந்த வர்க்கப் பிரிவனையை நிரந்தரமாக்குவதோடு மட்டுமல்லாமல் உடைமையற்ற வர்க்கங்களை உடைமையுள்ள வர்க்கம்சுரண்டுவதற்காக உரிமையை நிரந்தரமாக்கும் நிறுவனம் வரத்தொடங்கியதுஅதுதான் அரசு ." [10] ( **பிரடரிக் ஏங்கெல்;சு, குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்.பக் .167 -169** ) என்கிறார் பிரடரிக் ஏங்கெல்சு.

"பல சமூகங்கள் அல்லது வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியானது மைய அமைப்புடைய அரசாங்கத்தின் மூலம் வரிவிதித்தல், படைத்திறன் கொண்டிருத்தல் சட்டங்களை இயற்றி அவற்றின்படி அனைவரும் நடக்கச் செய்தல், குற்றமிழைப்போருக்கு நீதித்துறை மூலம் தண்டனை விதித்தல் முதலான பணிகளைக் கொண்ட ஒரு முற்றுரிமை வாய்ந்த அரசு" [11] (**பக்தவத்சலபாரதிபண்பாட்டு . .ப .மானிடவியல்587** ) என பக்தவத்சல பாரதி அரசின் பணிகளை விளக்குகிறார்.

"மனிதன் மற்றவர்களுடன் கூடி வாழ்ந்தாக வேண்டும் என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டவன்அவ்வாறு கூடி வாழும்போது ஒருவர் மற்றொருவரின் உரிமையையும் . கட்டுப்பாட்டையும் மதிக்க வேண்டியுள்ளதுஆனால் ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்கள் . அவர்களின் தனிப்பட்ட நலனிற்காகச் சுயநலப்போக்கை ஏற்படுத்திக் கொள்வதால் சமுதாயத்தில் பொறாமை, போட்டி, முரண்பாடு போன்ற பல ஒத்திசைவற்ற பண்புகள் மேலோங்குகின்றனஇவற்றைக் கட்டுப்படுத்தி சமூகச் சமநிலையை . நிலைநாட்டும் பொருட்டுப் பெரும்பாலான சமுதாயங்கள் அவற்றிற்கு ஏற்புடைய அரசியல் அதிகார முறையைச் செயல்படுத்துகின்றன"[12] ( **பக்தவத்சலபாரதி.ப .பண்பாட்டு மானிடவியல் .550**) கீழ்க்கணக்கு அறநூல்களை இயற்றியப் புலவர்களும், அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த

அரசுகளைத் திருத்தி, தம் வாழ்வியலுக்கு ஏதுவான அரசாக அமைக்க விரும்பினர் . அதனால்தான் அரசு என்பது இன்ன இன்னவாறு அமையவேண்டும் என்ற கருத்தியலைத் .தமிழ்ச்சூழலுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கின்றனர்

“மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு இன்றியமையாதவை எவை என்பதனை வரலாற்று ஏடுகள் நமக்கு எடுத்துரைக்கின்றனஎங்ஙனம் ( எவயவந) அவற்றில் அரசு . உருவாகியது அல்லது உருவாக்கப்பட்டது என்பதற்குத் தத்துவ முறையான கோட்பாடுகள் ஆனால் காலப்போக்கில் ஏற்பட்ட சமுதாய அமைப்பே அரசு உருவாகக் காரணம் .பல உண்டு அரசு தோன்றியது முதல் இன்றுவரை .என்பதில் ஐயப்பாடில்லை மனிதன் அரசியல் உணர்வுகளால் உந்தப்பட்டவனாய், மக்கள் வாழ்வு நலம்பெற செழிப்புற அரசு எப்படிச் செயல்படவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்பவனாய் வாழ்ந்து வரவேண்டும்.”[13] **(வாழ்வியற் களஞ்சியம் தொகுதி .1.ப.644 )** என்கிறது வாழ்வியல் களஞ்சியம் .

மேற்காண்பவற்றிலிருந்து அரசியலை நியாயப்படுத்தவோ, அல்லது நியாயமான அரசியலுக்கு மக்கள் சார்ந்த கருத்தியல் அவசியமாகிறது என்பதை ஆராய்ந்து அறியமுடிகிறதுநடப்பு ஆட்சியைக் கட்டமைக்க விரும்பும் நடப்புச் சமுதாயம் எதிலிருந்து . .எது மாறவேண்டும் என்ற அடிப்படையைப் புரிந்துகொள்வது அவசியம் அதற்கு முந்தைய ஆட்சிமுறைகள் பற்றி அறிந்துகொள்ளுதல் அவசியம் .

## மனிதகுல வரலாற்றில் பல்வேறுவிதமான ஆட்சிமுறைகள்

| | |
|---|---|
| **குடியாட்சி** (Republic) | மக்களே மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஆட்சி மக்களுக்குச் சொந்தம். |
| **சனநாயக ஆட்சி** (Democracy) | சமத்துவத்தை நிலைநாட்டி மக்கள் அனைவரும் சமமாகப் பங்கெடுக்கும் ஆட்சி. |
| **கும்பலாட்சி** (Monocracy) | யாருக்கும் தெரியாமல் எவருக்கும் கட்டுப்படாமல், அதேநேரம் எல்லோரும் எல்லாவற்றையும் அடக்கி ஆள முயலுவது. |
| **செல்வராட்சி** (Plutocracy) | பணம் படைத்தோர் ஒன்றிணைந்து ஏழைகளை அடக்கி, ஒடுக்கி ஆட்சி செய்வது. |
| **சமயத்தவராட்சி** (Theocracy) | தங்களது மதத்தை உயர்த்தி, பிற மதத்தினரை அடக்கி ஆளும் ஆட்சி. |
| **சாதியாட்சி** (Castocracy) | குறிப்பிட்ட சாதி பிற சாதியினரை அடக்கி ஒடுக்கும் ஆட்சி. |
| **சிறுகுழுவாட்சி** | வலிமைபெற்ற ஒரு சிறு குழு தந்திரம்இ சூழ்ச்சி |

| | |
|---|---|
| **(Oligarchy)** | பலத்தால் பிறரை அடக்கி ஆளும் ஆட்சி. |
| **கோனாட்சி (Monocracy)** | வீரம், விவேகம், சூழ்ச்சி மூலம் ஓர் அரசைக் கைப்பற்றி, தன்னை அரசராக்கி பரம்பரையாக ஆட்சி செலுத்துவது. |
| **குடிகோனாட்சி (Demo – Momarchy)** | அரசனும் ஆளுவார், குடிமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களும் ஆளுவர்இ இரு ஆட்சியும் சேர்ந்து நடைபெறுவது. |
| **தனி வல்லாட்சி (Autocracy)** | தனிமனிதன் போர்ப்படையின் துணைக்கொண்டு, யாரையும் ஆட்சிப்பொறுப்பில் அண்டவிடாமல் தன் விருப்பப்படி ஆட்சி செய்வது. |

இவ்வாறு உலகம் முழுவதும் பல்வேறு ஆட்சிமுறைகள் இருந்தாலும் மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்ட அரசே நலம் தரும் அரசாகிறது, நிலைக்கவும் செய்கிறது . பெரும்பாலும் இதுபோன்ற அத்தனை ஆட்சிமுறைகளும் தமிழகத்தில் சிலகாலம் காலமாற்றத்தில் மக்களின் புரிதல் தன்மையால் .வேரூன்றிதான் இருந்திருக்கின்றன ஓரளவேனும் ஆட்சிமுறைகள் மாற்றம் பெற்றுவந்துள்ளனகளப்பிரர் ஆட்சிக் காலத்தில் . உருவான அறஇலக்கியங்கள் பெரும்பாலும் அரசுக்கு, அரசியல் சார்ந்த கருத்தியல்களை எடுத்துரைக்கும் அல்லது கற்றுக்கொடுக்கும் நோக்கத்தில் இதுதான் அரசஅறம், இதுதான் அரசமுறை என புலவர்களாலும், முனிவர்களாலும் அறிஞர்களாலும் தெரிவிப்பதாய் அமைந்துள்ளனஅரசு நெறிமுறைப்பட வேண்டும் எனும் குரலில் நெறிப்பட்ட ஆட்சியை . .விரும்பிய கருத்தியல்களை அக்கால மக்கள் விரும்பியுள்ளனர்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இருக்கக்கூடிய அரசு, அரசியல், அரசாங்கம் எத்;தகையது, எவ்வாறு அவை இருந்தன, எவ்வாறு அவை இனி அமைய வேண்டும் என்பதை அறிவுறுத்துவனவாக அதன் பாடல்கள் அமைந்துள்ளனஅவையே அரசியல் குறித்த . அரசியல் வழி ஒரு சமூகத்தின் அரசுருவாக்கத்தை .கருத்தியல்களைப் பிரதிபலிக்கின்றன பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறஇலக்கியங்கள் .ஆராய்வது அவசியமாகிறது மேற்குறிப்பிட்ட அரசியல் கரூத்தாக்கங்களைக் கொண்டிருக்கின்றனஅரசியல் வழி தமிழ் . .சிவத்தம்பி சுட்டிக்காட்டுகிறார்.மக்களின் வரலாறு ஆய்வு செய்ய வேண்டிய அவசியத்தை கா "தமிழ் மக்களின் அரசியல் சமூக பொருளாதார பண்பாட்டு வரலாற்றை இலக்கிய நிலைநின்றும் இலக்கிய வழிநின்றும் பார்க்கும் ஆய்வுநோக்கு இன்னும் தொடங்கப்படவில்லை என்றே கூறலாம்தமிழ்நாட்டின் வரலாற்றைச் சில ஆட்சிப் . பல்லவர் காலம்) பரம்பரைகளின் வரலாறாகவே, சோழர் காலம்பார்ப்பதால் இப்பண்பு ( .நிலவுகிறது என்பர்"[14] ( **வாழ்வியற் களஞ்சியம் தொகுதி .1.ப.644)**

"சங்கத் தொகுப்புகளில் உள்ள அரசு உருவாக்க மூலங்கள் தொகுக்கப்பட்டு பட்டியலிடப்பட்டு ஆராயப்படவில்லையாதலால் நாம் திருக்குறளில் தொடங்கிப் பின்நோக்கிச்

சென்று சங்ககாலத்தைப் பார்க்கலாம் எனவும், அரசின் இன்றியமையாதத் தன்மையாக வள்ளுவர் கூறுவனவற்றைச் சரடாகவும் வழிகாட்டியாகவும் எடுத்துக்கொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசியல் உறவுகள் குறித்து ஆராய இயலும் எனவும் சிவத்தம்பி குறிப்பிடுகிறார். [15]
( **கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி.ப .51** )
இங்கு அரசு உருவாக்கப்பட்டதன் மூலத்தைத் தேட திருக்குறளை முதலில் அரசியல் வழி ஆராயவேண்டும் .ஏனெனில், சங்கமருவிய காலத்தில் உருவான திருக்குறளில் தான் அரசு மற்றும் அதன் இயக்கம் எவ்வாறு அமையவேண்டும் எனவும், அவ்வாறு அமைவதற்கு என்னென்னத் தேவை எனவும் வள்ளுவர் தனித்தனி அதிகாரங்களில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருக்கிறார் .

## திருக்குறள் வலியுறுத்தும் அரசியல் அறம்

தமிழிலக்கியப் பெருமிதத்தையும், தமிழனின் சிந்தனை உச்சத்தையும் உலக அரங்கில் உயர்வுற எடுத்துரைக்கும் ஒப்பற்ற நூல் திருக்குறள்இந்நூலுக்கு இதுவரை எண்ணற்ற . உரைகளும், பதிப்புகளும், நூற்றுக்கணக்கான மொழிபெயர்ப்புகளும் தோன்றியுள்ளனஇந்த . வரிசையில் புகழ்பாடும் படைப்புகள் பலவும், கணக்கற்ற ஆய்வுகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன . தமிழின் பிற படைப்புகளுக்கு எழுந்துள்ள ஆராய்ச்சி நூல்களைவிடத் திருக்குறளுக்குப் பல ஆனாலும் .மடங்கு மிகுதியாகும், இவற்றில் தனித்தொளிர்வனவற்றை விரல்விட்டு எண்ணிவிடலாம்வள்ளுவரால் ஆக்கப்பெற் .ற திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அதிமுக்கியமானதாகக் கருதப்படுகிறதுமேலும் ., பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அதிகப் பாடல்களையும் அடிகளையும் கொண்ட ஒரே நூல் திருக்குறளாகும்தமிழ் முதல் எழுத்தின் . அகரத்தில் தொடங்கி னகர இறுதி எழுத்தில் முடியும் சிறப்பும் இந்நூலுக்கு உண்டுமனித . சமுதாயம் மேன்மையடைய வாழ்வில் பின்பற்றவேண்டிய நல்லறங்களை .தொகுத்துக்காட்டுபவையாகவும் இந்நூல் அமைந்துள்ளது

***"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***
***தெய்வத்துள் வைக்கப் படும்."*** ***(திருக்குறள்.50)***

என்ற மேன்மையானக் கருத்து, மனிதா, இயற்கை தந்துள்ள வாழ்வதற்கான ஒரே வாய்ப்பை, மனத்துக்கண் மாசிலனாக வாழ்ந்து ஈந்து உவந்தளித்து, பல்லுயிர் ஓம்பி, பகுத்துண்டு செந்தாண்மைப் பூண்டு, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் எனச் சிந்தித்து, பழியஞ்சி, பண்பு காத்து வாழ்ந்தால் தான், மனிதனும் தெய்வப் பிறவியாகக் கருதப்படுவான் என்பதில் தான் வள்ளுவரின் கருத்து மையம் கொண்டுள்ளது என்பதனை அனைவரும் அறியவேண்டும்.

வள்ளுவர் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு உறுப்புகளைக் கொண்டவனே அரசனாவான் என்னும் கருத்தினைப் பதிவுசெய்துள்ளார் .மேலும், நடைமுறை வாழ்க்கையின் உன்னதமான அடிப்படை அரசியலையும், ஆழமானக் கருத்துகளையும் இரு அடிகளில் மிக எளிதாக எடுத்துரைத்துள்ளார்அணுவைத் துளைத்து ஆழ்கடலைப் புகட்டியது .

போல் அறக்கருத்துக்களை மிக எளிதாகவும் நேர்த்தியாகவும் எடுத்துரைத்துள்ளதால் மட்டும் இவை குறளல்லஒவ்வொரு அதிகாரத்திலும் எடுத்துச்சொல்லும் கருத்தின் முழுமையைப் . பத்துக் குறட்பாக்களில் பேசிக்காட்டும் அசாத்தியத்தில் தான் வள்ளுவரின் சிந்தனை உச்சம் ஏனெனில் .பெற்றுள்ளது, அந்தப் பத்துக் குறட்பாக்களில், சொல்லவந்த செய்திகள் அறக்கருத்தாக வரையறுக்கப்படும்;, அதன் அவசியம் விளக்கப்படும்;, விளைவுகளும் சொல்லப்படும்அறம் கடைப்பிடிப்பதின் மேன்மையும் ., அறத்தைக் கடைப்பிடிக்காததின் கீழ்மையும் உணர்த்தப்படும்ஆழ்ந்து நோக்கினால் சில அறக்கருத்துக்களை தான் விரும்பும் . இவ்வையகத்திற்கு நிறுவுவதற்காகக் காணும் நடைமுறை நிகழ்வுகளைச் சான்றாகக் காட்டும் அனுபவ அணுகுமுறையும் அதில் கையாளப்பட்டிருக்கிறது என அறியமுடியும்.

## திருக்குறளில் அரசியல் குறித்தான அதிகாரங்கள்

| | | |
|---|---|---|
| **இறைமாட்சி** | : | 381 - 383, 385 - 386, 389 - 390 |
| **கல்வி** | : | 391 - 393, 395, 397, 400 |
| **கல்லாமை** | : | 401 - 404, 406 - 408, 409 |
| **கேள்வி** | : | 411 - 414, 416 - 418, 426 |
| **அறிவுடைமை** | : | 423, 427, 429, 430 |
| **குற்றங்கடிதல்** | : | 431 - 434, 436, 439 |
| **பெரியாரைத்துணைகோடல்** | : | 441, 444, 446, 448, 449, 450 |
| **சிற்றின்பம் சேராமை** | : | 451, 452, 455 - 457, 459 |
| **தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல்** | : | 461, 463, 464, 467, 501, 502, 506, 511, 513, 515, 516, 520 |
| **காலம் அறிதல்** | : | 481, 487, 490 |
| **இடன் அறிதல்** | : | 491, 494, 497 |
| **சுற்றந்தழால்** | : | 525 - 527, 530 |
| **செங்கோன்மை** | : | 541, 544, 546, 548, 550 |
| **கொடுங்கோன்மை** | : | 551, 553, 557, 559, 560 |
| **வெருவந்த செய்யாமை** | : | 561, 563, 564, 566, 567 |
| **கண்ணோட்டம்** | : | 575, 576, 572 |
| **ஒற்றாடல்** | : | 582, 584, 586, 587, 590 |
| **ஊக்கமுடைமை** | : | 593, 594, 596, 599, 600 |
| **மடியின்மை** | : | 601, 605, 608 |
| **ஆள்வினை உடைமை** | : | 611, 614, 616, 620 |
| **இடுக்கண் அழியாமை** | : | 622, 623, 628 |

நாட்டை ஆளும் அரசன் எப்படி இருக்க வேண்டும்அவன் எப்படி நாட்டைச் . அரசனுக்குப் .செலுத்தவேண்டும் என்பதை வள்ளுவர் கீழ்வருமாறு எடுத்தியம்புகிறார் பொருள் சேரும் வழிகளை மேலும் உருவாக்குதலும், அப்படிச் சேர்ந்த பொருளை முறையாகத் தொகுத்தலும், அவற்றைத் தகுந்த முறையில் காத்தலும், காத்தவற்றை தக்க செலவினங்களுக்குச் செய்தலுமே வல்லமையான அரசு என்பர்இதனையே .,

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு." (திருக்குறள்.385)*

என்ற குறளில் விளக்குகிறார்ஒரு நாட்டினுடைய நிதியமைச்சராக இருப்பவர் ., நிதி நிலையறிக்கையைத் தயாரிப்பதற்கு முன், 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்' என்னும் இத்திருக்குறளைக் கட்டாயம் படிக்க வேண்டும்திருவள்ளுவரை . அறவழியாகவே பார்த்தவர்களை, இனிமேல் ஒரு பொருளியல் வல்லுநராகவும் பார்க்கவேண்டும்மேலும் ., திருக்குறளை உள்வாங்கி உற்றுப்படித்து வள்ளுவர் வாழ்ந்த காலத்திற்கே நம் சிந்தனைப் போக்கினை கொண்டுசென்றால் திருக்குறளை அடிப்படையாக வைத்துப் பழங்கணக்கையே போட்டுப் போட்டுப் பழக்கப்பட்ட நமக்கு மத்தியில் புதுப்பாதை புறப்படத்துவங்கும் எனலாம் .

அரசின் கீழ் இயங்கும் நாடானது பசியில்லாமலும், பிணியில்லாமலும், அயல்நாட்டின் பகையில்லாமலும் இருத்தலே நலமாக அமையும்நாட்டினது அரசு நாட்டுப்பொருளில் . ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் பசிதீர்க்கும் அரசாகவும், பற்பலத் திட்டங்களின் வழி நாட்டு மக்களின் சுகாதாரத்தைப் பேணும் அரசாகவும், நாட்டு மக்களின் அமைதியை விரும்பும் அரசாகவும் இருக்கும் நாடே சிறந்த நாடென திருக்குறள் நாடு இருக்கவேண்டிய இயல்பினை மொழிகிறதுஇச்செய்தியினை .,

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு" (திருக்குறள்.734)*

என்னும் குறள் வழி வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். குடிமக்களை வருந்தவிடாமலும், தானும் வருந்தாமலும் மக்களைக் காத்து, மக்களுக்குத் துன்பம் விளைவிப்பவரை அடையாளங்கண்டு அவர்களுக்கு தண்டனையளித்துத் தன் பணியைச் செவ்வனே செய்பவனே நல்ல ஆட்சியாளன் எனும் கருத்தைத் தாங்கிய குறளொன்று கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்." (திருக்குறள்.549)*

நாட்டை ஆளும் மன்னவனுக்குத் துணைநிற்பவர்கள் அமைச்சர்கள்இம்மரபு அக்காலம் . இக்காலத்தில் .தொட்டே இன்றுவரை ஆட்சிமரபாக இருக்கின்றதை அறியமுடிகின்றது முதல்வ .மாநிலத்தை ஆள்பவர் முதல்வராகிறார்ருக்குத் துணையாக அமைச்சர்கள்

இருக்கிறார்கள்இவ்வமைச்சர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை அமைச்சு அதிகாரங்கள் . இதனையே .வழி வள்ளுவர் எடுத்துரைக்கிறார்,

*“அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந்*
*திறனறிந்தான் தேர்ச்சித் துணை.” (திருக்குறள்.635)*

என்னும் வள்ளுவர் வாக்கின் வழி அறியமுடிகின்றதுகுற்றங்களை ஆராய்ந்து . எவரிடத்திலும் இரக்கமின்றி இவர் வேண்டியவர் இவர் வேண்டாதவர் எனப்பாராது, நடுநிலையோடு குற்றத்தினை அறிந்து தண்டனை வழங்கச் சொல்லும் முகமாக, முறையான ஆட்சி நடத்தவேண்டிய மன்னனின் நடுநிலைமையைக் கீழ்க்காணும் குறள் வலியுறுத்துகிறது.

**“ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை.” (திருக்குறள்.541)**

என்னும் இக்குறளின் பொருண்மையாவது, செங்கோன்மையுடன் ஆட்சி செய்யும் வேந்தன், குடிமக்களிடம் முறையற்ற வழிகளில் வரியினைப் பெறக்கூடாதுஅத்தன்மையானது ., பாதையில் வருவோர் போவோரிடம் வழிப்பறிக் கள்வன் பயமுறுத்தி பொருள் பறிப்பதற்குச் சமமாகும் என குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

*“வேலோடு நி;ன்றான் இடுவென் றதுபோலும்*
*கோலோடு நின்றான் இரவு.” (திருக்குறள்.552)*

என அறிவுறுத்தி நல்லற நெறியில் நாட்டைக் காக்கும் வேந்தனைக் குடிமக்கள் தெய்வமாகக் கருதி வழிபடுபவர் எனவும் குறிப்பிடுகிறார்.

*“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறை என்று வைக்கப்படும்.” (திருக்குறள்.388)*

என்னும் குறளில், இங்கு முறை செய்து காத்தல் எனக் குறிப்பிடுவது, நாட்டையாளும் அரசன் நாட்டை செழிப்புறச்செய்தலும், நடுநிலையான நீதி வழங்குதலும், நெறிப்பட்ட பொருளீட்டுதலுமாகிய இவ்வறங்களைச் செய்தல் சொல்லப்பட்டதாகக் கொள்ளலாம்.

அறம் வழுவா ஆட்சிமுறையே நாட்டை வளம் பெறச் செய்யும் என்பதற்கேற்பவும் மாறாக அரசனின் தன்னிச்சையான போக்கு சமுதாயத்தின் மாண்புகளைப் பாதிக்கச் செய்யும் என்பதற்கேற்பவும் பற்பல கருத்தியல்கள் திருக்குறள் வழி இடம்பெற்றிருப்பதை காணமுடிகிறதுசமுதாயத்திலுள்ள குடிமக்கள் வாழ்க்கை நன்னிலை பெற செம்மையான . மக்களின் இயல்பையும் .நெறிகளை வகுத்து ஆட்சிபுரிதல் அரசர்களுக்குரிய கடமையாகும், தேவைகளையும் உணர்ந்து செயல்படும் செங்கோன்மையாளன் அறம் தவறாது, அல்லவை நீக்கி சமுதாயத்தினை மேன்மையுறச் செய்தல் வேண்டும் என்கிறது கீழ்வரும் குறள்.

*“அறனிழுக்கா தல்லவை நீக்கி மறன்இழுக்கா*

***மானம் உடையது அரசு."*** ***(திருக்குறள்.384)***

அரசியல் நெறிமுறைகள் நாடு, நாட்டையாள்பவர், அமைச்சர், மக்கள் அரசியலுக்குள் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சொல்லப்பட்ட முறைகளைப் பார்க்கும்பொழுது திருக்;குறள் காலத்திலே அரசியலை வலியுறுத்தி சொல்லும் தன்மையும், எது அரசியல் என அடையாளங்காட்டுந் தன்மையும் அக்காலத் தேவையாக இருந்திருக்கிறதுதிருவள் .ளுவர் கூறும் அரசியல் கருத்தியல்கள் எதிர்காலத் தேவையையும் உள்ளடக்கியதாகச் சொல்லப்பட்டவையாக இருக்கிறதெனலாம்.

**நாலடியார் வலியுறுத்தும் அரசியல் அறம்**

நாலடியார் என்னும் அறநூல் சமணமுனிவர்கள் பலரால் இயற்றப்பட்டதுஇந்நூலை . வேளாண்வேதம், நாலடி நானூறு என்ற சிறப்புப்பெயர்களாலும் குறிப்பிடுகின்றனர்பதுமனார் . ) என்பவர் அறத்துப்பால்13), பொருட்பால் )24), காமத்துப் பால் )3) என்ற அதிகாரங்களால் இந்நூலினை பகுத்தளித்துள்ளார்கீழ்க்கணக்கு .முப்பாலாகப் பகுத்தவர் தருமர் ஆவார் . நூல்களில் திருக்குறளுக்கு அடுத்துப் புகழ்பெற்ற நூல் நாலடியார் .40 அதிகாரங்களையும், 12 இயல்களையும் உள்ளடக்கியுள்ளதுஇதனாலேயே .,

***'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி***
***நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி'***
***'பழகு தமிழ் சொல்லருமை நால் இரண்டில்'***

என்ற அடிகளை உருவாக்கி தமிழறிஞர்கள் திருக்குறளுக்கும், நாலடியாருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்போப் என்பவர் ஆங்கிலத்தில் இதனை மொழி .யு.வெளிநாட்டு அறிஞர் ஜி . பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் கருத்தமைவில் திருக்குறளும் .பெயர்த்துள்ளார் நாலடியாரும் ஒருசேர வைத்து எண்ணப்பட்டாலும் அரசியல் குறித்த விரிவான கருத்தாக்கங்கள் திருக்குறளைப் போல் நாலடியாரில் இடம்பெறவில்லை எனத் தோன்றுகிறதுசெல்வ நுகர்ச்சியின் காரணத்தால் அரசனிடத்தே பழகும் முறை மட்டும் ஒரு . .பாடலில் சொல்லப்பட்டுள்ளது

அரசனிடத்தே உள்ள செல்வத்தை நுகர வேண்டுமேயானால் அவர்களிடத்தே நெருங்கிப் பழகுதல் வேண்டும் என்ற கருத்தினை,

***"மன்னர் திருவும் மகளிர் எழினலமும்***
***துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா - துன்னிக்***
***குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்***
***ஊழை தங்கட் சென்றார்க் கொருங்கு."*** ***(நாலடியார்.167)***

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றதுஇக்கருத்தியலானது இச்சமூக இயங்குதலுக்கு . ஏனெனில் .எதிரானது எனலாம், அரசனின் செல்வங்கள் அரசியல் வழி பெறப்பட்டதாக இருப்பின் அதனை தேவை கருதி பொதுமக்களின் ஆக்கப்பணிகளுக்காக மட்டுமே

செலவிடுதல் வேண்டும்அதற்கு மாறாக தானும் தன்னைச் சார்ந்தவர்களும் அனுபவிக்கக் . இது எக்காலத்திற்கும் பொருந்த .கருதினால் தண்டனைக்குரியதாகக் கருதப்படும்ும் அரசியல் அறமாகும்.

## பழமொழிநானூறு வலியுறுத்தும் அரசியல் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பழமொழிநானூறு பல அரசியல் கருத்தாக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது அரசின் இயல்புகளை முறையே பாடல்கள் . 231 முதல் 257 வரையிலும், அரசினை ஆளும் அரசனுக்குத் துணையாக நிற்கும் அமைச்சர் குறித்தும் முறையே பாடல்கள் 258 முதல் 265 வரையிலும், மன்னரைச் சேர்ந்தொழுகும் தன்மை குறித்த பாடல்கள் முறையே 266 முதல் 284 வரையிலும், மன்னரின் அங்கத்தினராயிருக்கும் படைவீரர் குறித்த பாடல்கள் முறையே 311 முதல் 326 வரையிலும் இடம்பெற்றுள்ளன ஆக பழமொழிநானூறில் .44 பாடல்கள் அரசியல்பு தொடங்கி படைவீரர் உள்ளிட்ட தன்மைகளை ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் வரும் பழமொழிகளின் வழி வலியுறுத்தி நிற்கின்றன எனலாம்.

தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் பழமொழியை முதுமொழி, முதுசொல் என்று குறிப்பிடுகிறதுஅதற்குச் சான்றாக முதுமொழி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை .,

***"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்***
***மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்***
***குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்***
***ஏது நுதலிய முதுமொழி என்ப."*** ***(பழமொழி நானூறு.167)***

என்னும் நூற்பா விளக்குகிறதுநுண்மை ., சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகளைக் கொண்டு கருதிய பொருளை காரணத்தோடு முடித்துக் கூறுதல் முதுமொழி ஆகிறது . முதுமொழியாகிய பழமொழிகள் பழமொழிநானூறின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இம்முதுமொழிகள் சொல்லப்பட்டதன் நோக்கமே சொ .இடம்பெறுகின்றனல்லவந்த கருத்தைக் கூர்மைப்படுத்துவதற்கே எனலாம்பழமொழிநானூறில் வரும் அரசியல் குறித்த . அரசியல் கொள்கைகளைப் பழமொழிகளின் வழி .பழமொழிகளும் அத்தன்மையுடையதாகும் .கூர்மைப்படுத்த முனைகின்றன

"பழமொழிகள் எனப்படுபவை புதியனவாக அமைக்கப்படாது வழிவழியாக மக்களிடையே வழங்கிவரும் சுருதியுத்தி அனுபவங்களுக்கு இயைந்த அறிவுரை வாக்குகளாகும்இவை கருத்துக்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கேட்போர் . இவை பொதுமக்களின் அனுபவம் வாயிலாக .உளங்கொள்ளும் வகையிலும் தெரிவிக்கின்றன .அவர்களது உணர்ச்சியினின்று வெளிப்படுவன ஆகும்"[16] ( **ஆதமிழ் .வேலுப்பிள்ளை. .ப.இலக்கியத்தில் காலமும் கருத்தும்73-74** )

அரசன் நீதி கூறுகின்றபோது தனக்கு இவர் நண்பர்தனக்கு இவர் பகைவர் எனக் . தனக்கு .கருதுவானாயின் அது அவனுடைய செங்கோல் தன்மைக்குக் குற்றமுடையதாகும் மிக்க வேண்டியவராயினும் தகுதியற்ற செயலைச் செய்கின்றபோது வன்கண் உடைையவனாகி அவனைத் தண்டிக்க மனமில்லாதவன் அரசினை ஆளும் தகுதியில்லாதவன் எனும் கருத்தியல் பழமொழி நானூறில் பதிவு செய்யப்பட்டுள்ளதுஇச்செய்தியை .,

*“எங்கண் இணையர் எனக்கருதின் ஏதமால்*
*தங்கண்ண ரானும் தகவில கண்டக்கால்*
*வன்கண்ண னாகி ஒறுக்க ஒறுக்கல்லா*
*மென்கண்ணன் ஆளான் அரசு.”* *(பழமொழி நானூறு.241)*

என்னும் பாடல் வரிகளும் உணர்த்துகின்றனநீதி சொல்லும் முறை அறிந்து செல்வம் . உடையவருக்கும் வறுமை உடையவருக்கும் அரசன் நடுநிலையிலிருந்து திரியாதவனாய் அவ்வாறு நடுவுநிலை திரிந்து நீதி .இருவர் மனமும் ஒப்புமாறு நீதி கூறவேண்டும் சொல்வானேயானால் அது ஒரு தாயினது தனங்களை உண்ணும் குழந்தைகளுக்கு ஒருபக்கம் நீரொழுகி மறுபக்கம் பால் ஒழுகும் வஞ்சனைக்கு நிகரானது.

*“முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்*
*இறைதிரியான் நேரொக்க வேண்டும் முறைதிரிந்து -*
*தேரொழுகா னாயின் அதுவாம் ஒருபக்கம்*
*நீரொழுகிப் பாலொழுகு மாறு.”* *(பழமொழி நானூறு.244)*

மேற்கண்ட இப்பாடலடிகளின் கருத்தை உற்று ஆராய்கின்றபோது அக்காலத்தே தவறிழைத்தவருக்கு நாட்டை ஆண்ட அரசன் ஒருசார்பு நின்றும் நீதி கூறியிருக்கிறான் என்பது தெளிவுஇதனைக் கண்டிக்க .ும் பழமொழிநானூறு ஆசிரியர் தம் பாடலின் வழி அரசன் நீதி வழங்கும் முறை எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கிறார் எனலாம்.

பகை மன்னர்களிடையே சிறிது கொடுங்கோன்மை கொண்டாலும், அதனைவிட தன் அரசின் கீழ் இயங்கும் குடிமக்களிடத்தே செங்கோல் தன்மை கொண்டு ஒழுகுதலே வெற்றியைத் தரவல்லதாகும்செங்கோல் புரியும் அரசனுக்கே மக்கள் தம் உடைமைகளை . இதனையே .அவனுக்காக அளிப்பர்,

*“அங்கோல் அவிர்தொடி அழியான் ஆயினும்*
*செங்கோல் அல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால்*
*வெங்கோன்மை வேந்தர்கள் வேண்டும் சிறிதெனினும்*
*தண்கோல் எடுக்குமாம் மெய்”* *(பழமொழி நானூறு.251)*

என்கிற பாடலின் கருத்தியலும் கொண்டிருப்பதை உணரமுடிகிறதுஎமன் உயிரினைக் . கொள்ளுங்காலத்தில் அவர்தம் குறிப்பினையும், தன்னால் உயிர்கொல்லப்படுதலை உடையார் கூறும் மாற்றத்தினையும் ஆராய்ந்து அறிவதில்லைஅதுபோல அரசன் குடிகளை மிகவும் .

விரைந்து த ுன்புறுத்தி அடிமை செய்வானாயின், மக்கள் செய்வது என்ன இருக்கின்றது எனும் கருத்தியலைக் கீழ்வரும் பாடல் பறைசாற்றுகின்றது .

***"கூற்றம் உயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து***
***மாற்றம் உடையாரை ஆராய தாற்றவும்***
***முல்லை புரையும் முறுவலாய் செய்வதென்***
***வல்லை அரசாட் கொளின்."*** ***(பழமொழி நானூறு.255)***

மலைப்பகுதியிலே நிறைந்து பரந்து ஒழுகுகின்ற குளிர்ந்த நீரின் பெருக்கம், மலையிடத்தே பெய்த மழையின் அளவைக் காட்டும், அதுபோல பகைவரை வெல்லுகின்ற சினத்தையுடைய அரசனது கல்வியின் தன்மையையும், அவனின் நீதி உரைக்கும் முறையையும் அவனது அவையே அறிவிக்கும்இக்கருத்தினையே .,

***"கல்வி யகலமும் கட்டுரை வாய்பாடும்***
***கொல்சின வேந்தன் அவைகாட்டும் மல்கி -***
***தலைப்பாய் இழிதரு தண்புனல் நீத்தம்***
***மலைப்பெயல் காட்டுந் துணை"*** ***(பழமொழி நானூறு.259)***

என்னும் இப்பாடலும் விளக்குகின்றதுஅதாவது ., அரசனின் கல்வியறிவை அவன் தன்னகத்தே வைத்திருக்கும் அவையினராக இருக்கும் அமைச்சர்களின் வழி விளங்கும் என்பதாகும்இதனால் தேர்ந்த அறிவுடைய அமைச்சர்களை ஒரு அரசன் கொண்டிருக்க . பேசத்தகாதவற்றைப் பேசியவர் நாவினைப் பருந்து .வேண்டும் என்பது தெளிவாகிறது எறிந்துண்ணாது என்று கருதி, செருக்கு கொண்டு இறுமாப்புடன் இருப்பவர்கள், ஒருவர் தம்மொடு மாறுபட்டு நின்றால் அவர் தான் நினைத்ததைத் தவறாது முடிக்க வல்லாரை வெகுளச் செய்து பலிபீடத்தின் மேலிட்ட உணவினை உண்பராய் அரசர்க்கு யாவரையும் இகழ்ந்து பேசிச் செருக்குறுதல் ஆகாதது என்ற கருத்து புலப்படுகிறதுஇதனை .,

***"உரைத்தவர் நாவோ பருந்தெறியா தென்று***
***சிலைத்தெழுந்து செம்மாப் பவரே - மலைத்தால்***
***இழைத்த திகவா தவரைக் கனற்றிப்***
***பலிப்புறத் துண்பார் உணா."*** ***(பழமொழி நானூறு.296)***

என்ற பாடலும் புலப்படுத்துகிறதுமேலும் ., அரசாட்சியின் முக்கிய அம்சமாக விளங்கும் அரசன் என்பவன் மன்னன், வேந்தன், இறைவன், அரசாள்வோன் எனும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெற்றிருப்பதை 248, 244, 245, 249, 255 போன்ற பழமொழிநானூறு பாடல்கள் வழி அறியமுடிகிறது.

பழங்காலத்தில் இருந்த தமிழ்ச்சமூக வழக்கத்தில் அரசன் பெண் கேட்டுச் செல்லும் பொழுது பெண்ணின் தமையன்மார்கள் சிலர் சினம் கொண்டு மறுத்து நின்றுள்ளனர் . இதுபோன்ற அக்கால நிகழ்வுகளை ஏடுகளில் ஏற்றித் தந்த புலவர்கள், சங்ககாலத்தின்

எச்சமாக இந்நிகழ்வு இக்காலத்திலும் தொடர்ந்திருப்பதனை பதிவுசெய்துள்ளனர் என்றே சொல்லவேண்டும்இக்குறிப்புணர்த்தும் செய்தியாவது ., பெரும்வேந்தர்களும் பெண்கேட்டுச் செல்லும் அளவிற்குச் செல்வந்தர்களாக நிலக்கிழார்கள் வாழ்ந்துள்ளனர் என்பதாகும் . ஏனெனில், சமூக மதிப்பை உயர்த்துவதற்கும், நிலப்பரப்பை தன்னரசோடு இணைத்து ஆட்சியமைப்பை விரிவுபடுத்துவதற்கும் இச்செயல் ஏதுவாக அமைந்துள்ளதுஇதனையே .,

***“இருகயல் உண்கண் இளையவளை வேந்தன்***
***தருகென்றாற் றன்னையரு நேரார் செருவறைந்து -***
***பாழித்தோள் வட்டித்தார் காண்பாம் இனிதல்லால்***
***வழைக்காய் உப்புறைத்த லில்”*** *(பழமொழி நானூறு -327)*

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றதுஇப்பாடலில் பெண் மறுத்ததற்கான அடிப்படைக் . காரணங்களாக பிறப்பின் குலப்பெருமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுஇக்காரணத்தினால் . வேந்தர்கள் படையெடுத்து அவர்களை அழிக்கமுற்பட்டுள்ளனர் என்னும் கருத்தும் .பதிவுசெய்யப்பட்டுள்ளது

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் பழமொழிநானூறில் இடம்பெற்றுள்ளனகுறிப்பாக ., கரிகாலன், கொற்கைப் பாண்டியன், செம்பியன் சேரமான், மனுநீதிச் சோழன் போன்றோரைக் குறிப்பிடலாம் பழமொழி நானூறு) .- 243, 319) கரிகாலன் இளைஞனாக இருந்தபோது வழக்குரைக்க வந்த நரைமுடியுடைய முதுமக்கள் மன்னனின் இளமையைக் கண்டு தயக்கமுற்றனர்இதனை உணர்ந்த மன்னன் தானும் நரைமுடிதரித்து . வழக்குரையை தீர்த்தான் என்ற வரலாற்றுச் செய்தியை பழமொழிநானூற்றின் 6 வது பாடல் எடுத்துரைக்கிறதுகருவூரிலே இருந்த கரிகாலனின் பெரும் சிறப்பால் பலரும் வேண்டி . அவனைச் சோழ நாட்டிற்கு அரசனாக்கிய செய்தியை பழமொழிநானூற்றின்230 ஆம் பாடலும், இளம் வயதியிலேயே இரும்பிடர்த்தலையார் என்பவரைத் தனக்குத் துணையாகப் பெற்று தம் பகைவர்களை வென்று குற்றமற்ற செங்கோலாட்சி செலுத்திய செய்தியை பழமொழி நானூற்றின் 239 ஆம் பாடலும் பதிவு செய்துள்ளதுமனுநீதிகண்ட சோழ மன்னன் . பசுங்கன்றைத் தேர்க்காலினால் கொன்ற குற்றத்திற்காக தன் இளங்குமாரனையும் தேர்க்காலில் இட்டு உயிரை வதைத்த செய்தி இந்நூலில் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது .- பழமொழி நானூறு .242

அரசாட்சி செம்மையாகத் திகழச் செல்வம் வேண்டும்அச்செல்வம் மக்களிடமிருந்து . ஆதலால் .வரியாக பெறப்பட்டது, வரிதிரட்டும் நோக்கமும் செயலும் நன்கு திட்டமிடப்பட்டுள்ளதுஇவ்வாறு பெறப்பட்ட வரியானது சொந்தச் செலவு ., பொதுச்செலவு போன்ற காரணங்களுக்கு செலவிடப்பட்டதுசங்ககால தமிழரிடமே வரி வசூலிப்பதில் ஒரு . அதற்கு மாறாக செயல்படும் அரசு .விதமான ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட்டன என்பர் எ .கொடுங்கோன்மை ஆட்சியாக இகழ்ந்துரைக்கப்பட்டுள்ளதுனவே, அரசன் என்பவன் மக்களிடம் மிகுதியாக வரி வசூலித்தலை தவிர்த்து அன்புமொழி கூறி காலமறிந்து பெறவேண்டும்அவ்வாறு மக்களிடமிருந்து பெற்ற பொருளைக் காத்தல் மன்னனின் .

மக்களைத் துன்புறுத்தி பெற்ற வரியானது .தலையாய கடமையாகக் கருதப்பட்டது மயிலினது உச்சிக் கொண்டையை அறுத்து அம்மயிலுக்கே உணவாகக் கொடுப்பதற்கு இணையானது எனக்கூறப்பட்டுள்ளதுஇச்செயலை மண்ணில் மக்களினம் நிலைத்திருக்கும் . இதனையே .வரை எந்நாளும் போற்றமாட்டார்கள் எனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது,

*“அடைய வடைந்தாரை அல்லவை செய்து*
*கொடை வேந்தன் கோல்கொடிய னாகிக் குடிகள்மேல்*
*கூட்டறப்பக் கொண்டு தலையளிப்பின் அஃதன்றோ*
*சூட்டறுத்து வாயி லிடல்” (பழமொழி நானூறு.247)*

என்னும் இப்பாடல் உணர்த்துகின்றதுஇவ்வாறு மக்களைத் துன்புறுத்திப் பெற்ற வரியினைக் . .கொண்டு தன் மக்களுக்குச் செய்யும் நற்செயலும் வீணற்றதாகவே அமையும் என்பர்

## நான்மணிக்கடிகையில் அரசியல் கருத்தாக்கங்கள்

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய நீதிநூல்களில் ஒன்றான நான்மணிக்கடிகையில் பல இடங்களில் அரசியல் குறித்த கருத்துக்களும் அரசரின் பண்புகளும், பகைவரின் இயல்புகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளனநான்மணிக்கடிகையில் . அரசியல குறித்த கருத்தாக்கம் ஆறு இடங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுசெங்கோலாட்சி ., ஆட்சி செலுத்தும் விதம், கோல்நோக்கிவாழும் குடியின் தன்மை, மன்னனின் தன்மை, மன்னனின் எண்ணப்படி அமையும் ஆட்சிமுறை குறித்த செய்தி, செங்கோலாட்சி இல்லாத நாடு, நடுநிலை உடைய அரசனின் தேவை போன்ற பல்வேறு கருத்தாக்கங்களை முறையே 18, 19, 27, 40, 47, 94 ஆகிய பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

அரசன் என்பவன் ஈகை, கல்வி, அறிவு, அஞ்சாமை முதலிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு திகழவேண்டும்அரசன் தன்னலத்தை மட்டுமே பாராமல் . பொதுநலத்தை மனத்தில் கொண்டு மக்களுக்கு நன்மை புரியவேண்டும் என்றும், அரசன் தன் மனம்போன போக்கில் ஆட்சிசெலுத்தாமல் அவையோரோடு ஆராய்ந்து பார்த்துத்தான் எச்செயலையும் செய்தல்வேண்டும் என்பதனை,

*“............... தெரிந்து ஆள்வான்*
*உள்நாட்டம் இன்மையும் இல்” (நான்மணிக்கடிகை.96)*

என்னும் வரிகள் உணர்த்துகின்றன .மேலும், அரசனது போக்குப்படி ஆட்சி அமையும் என்பதனால் செங்கோலாட்சியை ஏற்று, அவன் கைப்பற்றிய பிறநாட்டையும் ஆள்வதே அரசனின் இயல்பு எனக்கொண்டனர்மக்களின் .அவ்வரசனையே மக்களும் போற்றினர் . நலனிற்கும், மேம்பாட்டிற்கும் அரசனே பாதுகாப்பு என்பதால் அவனுக்கு மிகுந்த உயர்வினைத் தந்தனர் என்னும் பொருண்மையில் மேற்கண்ட பாடல் அமைந்துள்ளது எனலாம்.

சினம் மிக்க வேல் ஏந்தும் அரசனின் செங்கோல் ஆட்சியில் மட்டுமே நாடு நலம் பெறும் எனும் கருத்தியலைத் தாங்கி,

***"மனைக்காக்கம் மாண்ட மகளி ரொருவன்***
***வினைக்காக்கஞ் செவ்விய னாதல் சினச்செவ்வேல -்***
***நாட்டாக்கம் நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கம்***
***கேளி ரொரீஇ விடல்."*** ***(நான்மணிக்கடிகை.20)***

என்னும் இப்பாடல் பேசப்பட்டுள்ளதுஆட்சிமுறையில் அரசனுக்கு முக்கியத்துவம் . கொடுக்கப்பட்ட போதும், அரசனுக்கு உதவ அமைச்சர் போன்ற அமைப்புக்களும் இருந்தன . இதனை, சிலப்பதிகாரத்தில் 'எண்பேராயம், ஐம்பெருங்குழு' என்ற சொல்லால் குறிப்பிடுவர் . எண்பேராயத்தில் கரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம் உள்ளிட்ட எட்டு பேரும், அமைச்சர், புரோகிதர், சேனாபதியார், தாவாதிதொழில் தூதுவர், சாரணர் போன்ற ஐவரும் ஐம்பெருங்குழுவில் இருந்து அரசனுக்கு ஆட்சிமுறை செலுத்தவேண்டிய அறிவுரை வழங்கினர் என்றும், எச்செயலானாலும் அரசன் இக்குழுவினரோடு கலந்தாலோசித்தே முடிவு எடுக்கவேண்டும் என்பது அரசநியதியாக இருந்தது.நான்மணிக்கடிகை) - .94:4)

அரசஅமைப்பிற்கு அமைச்சும், படையும், குடிமக்களும் மிக முக்கியமானவையாகக் கருதப்படுவர்குறிப்பாக ., படைகள் இல்லாத நாடானது வலிமை இழந்ததாகவும், எதிரிகளால் எளிதில் கைப்பற்றக் கூடியதாகவும் அமையுமென்றும், இந்நூல் இயற்றப்பட்ட அக்காலச்சூழலில் யானைப்படை .நான்மணிக்கடிகை)54:1), குதிரைப்படை .நான்மணிக்கடிகை)54:2), தேர்ப்படை .நான்மணிக்கடிகை)26), காலாட்படை, (நான்மணிக்கடிகை.56) போன்ற நால்வகைப்படைகளும் மன்னனின் முக்கிய பாதுகாப்பு அங்கமாக செயல்படுவதற்காக உருவாக்கப்பட்டன என்பர் .

மாறுபட்டக் கருத்துக்கள் வெளிப்படும் பொழுது அவ்விடத்தில் சமநிலை தோன்றாவிடில் பகைமையானது முதலில் சினத்தில் வெளிப்படும். இப்பகைமையானது தன் தகுதியறியாத ஒருவனிடம் ஒன்றை இரந்து பெறுவதால் தோன்றுகிறது என்றும், தகுதியினை அறிந்தே பெறவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளதுஇப்பகைமையை . சொல் .குறிப்பால் அறியலாம் என்றும் கூறுவர், செயல், முகக்குறிப்பு போன்றவைகளினால் பகைமை வெளிப்படுவதாக,

***"............................. பகை ஒருவன்***
***முன்னம்வித் தாக முளைக்கும், முளைத்தபின்***
***இன்னாவித் தாகி விடும்"*** ***(நான்மணிக்கடிகை.33)***

என்னும் வரிகளால் அறியலாம்பகைவர்களின் நட்பினையும் ., அதன் நோக்கத்தையும் அறிந்து விலகிவிடவேண்டும்அதுவே தனக்கும் தன்னைச் ச ார்ந்த மக்களுக்கும் பயனைத்தரும் என்றுரைக்கப்பட்டுள்ளதுமேலும் ., பகைவர்கள் என்பவர்கள் நாம்

அறியாதவர்கள் அல்லது ஒரு குழுவோ கூட்டமோ மட்டுமில்லை தன்னுடனே இருந்து உண்மையுரைக்காதவர்களும் பகைவர்களாகவே கருதப்பட்டனர்.நான்மணிக்கடிகை) - .23)

நாட்டில் அரசனது ஆட்சியின் கீழ் மக்களின் மனம் கலங்கினால் அரசனின் ஆட்சியும் விரையில் கலங்கும்அதாவது மக்களைத் துன்புறுத்தாத அரசாட்சியின் தேவையையும் ., மக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் அரசுக்கு இது எச்சரிக்கையையும் தெரிவிக்கிறது . இக்கருத்தினை,

***"பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னாள் தானதிர்க்கும்***
***கற்றா னாதிர்ப்பிற் பொருளதிர்க்கும் பற்றிய -***
***மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பின்***
***பாட லதிர்ந்து விடும்."*** ***(நான்மணிக்கடிகை.21)***

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றனநான்மணிக்கடிகையின் மற்றொரு பாடல் . நற்குடிமக்கள் இல்லாத நாட்டில்மன்னன் இருப்பதில்லை எனவும், செங்கோலாட்சி இல்லாத மன்னனின் நாட்டில் தவம் நிகழ்தல் இல்லை என்றும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

***"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்***
***தவமிலா ரில்வழி யில்லை தவமும்***
***அரச னிலாவழி யில்லை யரசனும்***
***இல்வாழ்வா ரில்வழி இல்."*** ***(நான்மணிக்கடிகை.49)***

என்னும் மேற்கண்ட பாடலில், தவம் எனப்படுவது மன்னனிடம் மக்கள் வேண்டி நிற்பதாகக் கருத இடமுண்டு செங்கோல் தன்மை இல்லாத அரசனிடம் பொருள் பெற்று மக்கள் வாழமாட்டார் என்பதாகவும் கொள்ளலாம் .

நாட்டில் வாழும் எவரிடத்திலும் இவர் வேண்டியவர், இவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் ஆட்சி புரிதலே நடுநிலையான அரசாளும் முறையாகும் . .நடுவுநிலையில் இருந்து எதையும் ஆராய்ந்து செய்பவனே அரசாளும் இயல்பு உடையவன் இத்தகைய கருத்துடைய பாடல்கள் பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் தொடர்ந்து சொல்லப்பட்ட முறை ஆராய்ச்சிக்குரியதுஎனவேதான் .,

***"ஆசார மென்பது கல்வி யறஞ் சேர்ந்து***
***போக முடைமை பொருளாட்சி யார்கண்ணும்***
***கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்***
***உண்ணோட்ட மின்மையு மில்"*** ***(நான்மணிககடிகை.96)***

என்னும் பாடலில், ஒருசார்புத் தன்மையுடைய ஆட்சிமுறையை நான்மணிக்கடிகை காலத்தே மட்டுமல்லாது கீழ்க்கணக்கு நூல்களின் பெரும்பாலான காலத்திய அரசியல் தற்சார்புடைய தன்மையைப் புலப்படுத்துகிறதுஅக்காலத்தே அரசன் தனக்கு வேண்டியவருக்கு . இனியவனாகவும், வேண்டாதவருக்கு கொடியவனாகவும் முறைதவறிய ஆட்சி

புரிந்திருக்கிறான் என்பது மேற்கண்ட நான்மணிக்கடிகைப் பாடல்கள் வழி தெளிவாகிறது . ஒரு பண்பு அரசனுக்குத் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுவதை ஆராயும்பொழுது அது .உணர்த்தப்படுவதற்கான தேவை புலவர்களிடத்தே இருந்திருக்கிறது எனக் கூறலாம் போரானது நாள்தோறும் நிகழக்கூடிய காலங்களில்தான் நீதி இலக்கியங்கள் தோன்றி அ .வளர்ந்துள்ளனறஇலக்கிய நூலான நான்மணிக்கடிகையும் போர் பற்றிய பதிவுகளை இச்சூழலில்தான் பதிவு செய்துள்ளன எனலாம் .

## திரிகடுகம் வலியுறுத்தும் அரசியல் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திரிகடுகத்தில் அரசியல் குறித்த கருத்தாக்கங்கள் 12 செய்யுட்களில் பாடுபொருளாகப் பேசப்பட்டுள்ளனகுடிகளைக் காக்கும் அரசன் ., கொடுங்கோல் அரசன், மன்னனின் தொழில், அரசனுக்கு வரும் தீங்கு, முறைதவறி ஆளும் அரசன், நீதி பிழைத்தவன் நிலை, ஒற்றருடைய குணங்கள், குடிக்கு நன்மை செய்யும் அரசன், அரசனின் செங்கோல், அரசனுக்குரிய சிறப்புகள் முறையே 13, 33, 34, 50, 53, 61, 66, 80, 85, 96, 98, 100 ஆகிய பாடல்களில் திரிகடுகம் அரசியல் குறித்த கருத்தாக்கங்களாக எடுத்துரைக்கிறதுஇவை அக்கால அரசியல் சூழ்நிலை எங்ஙனம் இருந்தது என்பதையும் ., எவ்வாறு இருந்தால் அரசனுக்கும்;, மக்களுக்கும் நலம் பயக்கும் என்பதையும் தம் பாடல்களின் கருத்தமைவின் மூலம் புலப்படுத்துகின்றன.

அரசனுக்குரிய கடமைகளைப் பற்றி திரிகடுகத்தில்; வலியுறுத்தப்பட்டுள்ளது . செங்கோலுக்கு அஞ்சி வாழுகிற குடிகளைக் காத்தல், ஆலமரத்தின் விழுதுகள் போலக் குடிமக்களைக் காக்கின்ற அமைச்சரைக் காத்தல் மற்றும் வேலுக்குப் பூண்போல் உறுதியாக மக்களைக் காக்கின்ற திண்மையான காவல் தொழிலைக் கைக்கொள்ளல் என அரசனுக்கான அறிவுரையைக் கருத்தியலாகக் கொண்டிருக்கிறது.

> ***“கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழிஇ***
> ***ஆலம்வீழ் போலும் அமைச்சனும் வேலின் -***
> ***கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்***
> ***படைவேந்தன் பற்று விடல்.”*** *(திரிகடுகம்.33)*

அரசனுக்குரிய தொழில் இவையென அறிவுறுத்தும் போக்கைக் காணும் பொழுது இந்நூல் உருவாகிற காலத்திலே அரசன் தன் கடமையிலிருந்து தவறியிருக்க வாய்ப்புண்டு . அதனால்தான் அவனுக்குரிய கடமை இவையென அடையாளம் காணும் முகமாக இப்பாடல் அரசு என்பது மக்களையும் கடந்து .அமைந்திருக்கிறது இரட்சிக்கும் ஓர் உன்னதமான நிறுவனம் என்கிற கருத்தியலைக் கொண்டுள்ள ஒருவர் அதன் அடிப்படையில் அரசு பற்றி உயர்ந்த மதிப்பீடுகளையும் மரியாதையையும் விசுவாசமும் அது சார்ந்த கருத்துக்களையும் கொண்டு அரசு பக்தனாகத் திகழ்கிறார்இத்த .அதற்காகவே பாடுபட்டும் உழைக்கிறார் .கைய

கட்டுப்பாடுகளை முன்வைக்கும் திரிகடுகத்தின் ஆசிரியர் தனது எதிர்பார்ப்புகளை தன் செய்யுளின் வழி வெளிப்படுத்தியிருக்கிறார் எனலாம்.

இவ்வுலகில் உயர்ந்தோராகப் போற்றப்படுபவர்கள் எவரென பட்டியலிடும் திரிகடுகப் பாடலொன்று தனது குடிகள் குற்றம் செய்தால், முறை மாறாது நீதி வழங்கும் அரசனையும், அரசனின் ஆணைக்கு அடங்கிக் கவலை கொள்ளாது இருக்கின்ற குடிகளும் உயர்ந்தவர்களாவர் எனும் கருத்தைச் சுமந்துநிற்கிறதுஇக்கருத்தினை .,

*"மூன்று கடன்கழித்த பார்ப்பனும் ஓர்ந்து*
*முறைநிலை கோடா அரசுஞ் சிறைநின்று -*
*அலவலை இல்லாக் குடியும்இம் மூவர்*
*உலகம் எனப்படு வார்." (திரிகடுகம்.34)*

என்னும் மேற்கண்ட இப்பாடலிலும் ஓர்ந்து முறைநிலை கோடா அரசன் உயர்ந்தவன் என்ற கருத்தால் வெளிப்பட்டுள்ளது எனலாம்காரணம் ஒருசார்பு பற்றுக்கொண்டு நீதி வழங்கிய . அரசமுறை அக்காலத்தே இருந்தது என்பதனை இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது.

பழைய தன்மையை எண்ணி, எளியவர்களைப் பேணுதல், தமக்கு உறவுடைய நண்பர் மகிழும்படி உரிமையோடு அவர்களை அரவணைத்துக் கொள்ளுதல், இன்சொற்களால் தன் இனத்தைச் சேர்த்துக் கொள்ளுதல் ஆகிய இம்மூன்றும் ஒரு நாட்டையாளும் அரசனுடைய மைந்தனான இளவரசனுடைய தொழில்களாகும் எனத் திரிகடுகத்தின் 58 ஆவது பாடல் எடுத்துரைக்கின்றதுமுறை தவறி நாட்டையாளும் மன்னனுக்கு அரசியல் தன்மைகளை . எடுத்துக்கூற வந்த புலவர் சற்று மாறுபட்டு அரசனின் மகனுக்கும் அரசியல் அறத்தை இதனை .எடுத்துரைக்கிறார்,

*"பழமையை நோக்கி அளித்தல் கிழமையால்*
*கேளிர் உவப்பத் தழுவுதல் கேளிராய்த் -*
*துன்னிய சொல்லால் இனம்திரட்டல் இம்மூன்றும்*
*மன்னர்க் கிளையான் தொழில்." (திரிகடுகம்.58)*

என்னும் பாடலும் புலப்படுத்துகிறதுமக்கள் என்ற பெருங்கூட்டத்தைக் காக்கத் தனியொரு . அரசனாலோ அல்லது அமைச்சன் முதலான அரசியல் உறுப்பினர்களாலோ இயலாது போன - தற்கால .காலகட்டங்களில் வேறு பல பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன இரும்புக்கால நாகரிகங்களைத் தொடர்ந்து தொழிற்துறையில் முன்னேறி ;நாடு' என்ற கட்டமைப்பிற்கு அரசாட்சி வந்தவிடத்து அரசினைப் பலப்படுத்த படைகள், எயிலரண், கருவூலம் ஆகிய மூன்று உறுப்புகளும் ஏற்படுத்தப்பட்டனஇந்நிலையில் மக்களை ஆளுதல் . என்ற கருத்து மண்ணை ஆளுதல்' என்ற நிலையில் 'மண்ணாளும் வேந்தர்க்குறுப்பு' என்ற அரசனுக்குக் குறிக்கப்பெறுவது நோக்கத்தக்கது.திரிகடுகம் - .100

அரசன் என்பவன் தன்னுடைய பேராற்றலால் குடிமக்கள் எண்ணத்திலும், மதிப்பிலும் உயர்தல் வேண்டும்அதன்மூலம் மக்களை ஒருங்கிணைக்கவும் அவர்களின் மேல் அதிகாரம் . குட .செலுத்தவும் இயலும்மக்களிடம் அன்பு செலுத்தினால் மட்டுமே அரசன் தன்னுடைய ஆட்சியுரிமையைத் தக்க வைத்துக் கொள்ளவும் நாட்டினமைதியை நிலைநிறுத்தவும் இயலும்இக்கருத்தினை .,

*"கோலஞ்சி வாழுங்குடி.............*
*படைவேந்தன் பற்றுவிடல்"* *(திரிகடுகம்.33)*

என்னும் வரிகளும் புலப்படுத்துகிறதுகுடிமக்களைத் தவறாது காக்கும் அரசன் எல்லோரிலும் . .திரிகடுகம்) .அரியவனாகப் போற்றப்படுவான்100) செங்கோன்மையை நிலைநாட்டிக் குடிகளைக் காக்கும் பொறுப்பு அரசனுக்கு உரியதாக இருந்ததுநீதி வழங்குவதில் . இறுதித்தீர்ப்பு வழங்கும் தலைமைச்செயலும் அரசனைச் சார்ந்ததாக அமைந்தது . இக்காரணங்களால் அமைச்சன், குடிகள், காவல், படைகள், எயிலரண், கருவூலம் ஆகிய உறுப்புக்கள் மீது பற்றுக் கொள்ளுதலும், நடுவுநிலைதவறாது அரசாளும் தன்மையும் அரசனின் கடமையாகக் கருதப்பெற்றமையை அறியமுடிகிறதுஇதனையே .,

*"சீலம் அறிவான் இளங்கிளை சாலக்*
*குடியோம்பல் வல்லான் அரசன் வடுவின்றி -*
*மாண்ட குணத்தான் தவசியென் றிம்மூவர்*
*யாண்டும் பெறற்கரி யார்"* *(திரிகடுகம்.13)*

என்னும் திரிகடுகத்தின் பாடல் குடிகளைக் காக்கவல்ல அரசன் பற்றித் தெரிவிக்கிறது . குடிகள் வருந்துமாறு வரி வாங்குகிற கொடுங்கோல் மன்னன் இருக்கும் நாடானது மழையைக் குறைக்கிறத் தன்மையுடைய அரசன் இருக்கும் நாடு என்னும் கருத்தினை வெளிப்படுத்துகிறதுஅதாவது கொடுமையான ஆட்சிபுரிந்து மக்களை வருத்தும் நாட்டினை . உடைய அரசனது இடத்தே நாடு கெட்டு வளம் குறைந்து மழை பொய்த்துவிடும் என்பதாகக் இச்செயலையே .கூறுவர்,

*"கொள்பொருள் வெஃகிப் குடியலைக்கும் வேந்தனும்*
*உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்*
*இல்லிருந் தெல்லை கடப்பாளும் இம்மூவர்*
*வல்லே மழையருக்குங் கோள்."* *(திரிகடுகம்.50)*

என்னும் இப்பாடல் எடுத்துரைக்கின்றதுநாட்டினை நல்வழியில் கொண்டு செல்ல அரசனின் . செங்கோலாட்சி மட்டுமல்லாது, அச்செங்கோலாட்சிக்குத் துணைநிற்கும் அமைச்சர்களின் ஒத்துழைப்பும் மிக அவசியமானதாகும்அத்தகைய அமைச்சர்கள் எங்ஙனம் மன்னனுக்குத் . துணைநிற்க வேண்டும் என்பதையும், அதற்கு அமைச்சர்கள் ஆற்றவேண்டிய கடமைகளையும் திரிகடுகப் பாடலாசிரியர் அறிவுறுத்தும் விதமாக இப்பாடல் அமைகிறது.

***“ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்***
***எய்துவ தெய்தாமை முற்காத்தல் வைகலும் -***
***மாறேற்கும் மன்னர் நிலையறிதல் இம்மூன்றும்***
***சீரேற்ற பேரமைச்சர் கோள்.” (திரிகடுகம்.61)***

என்னும் மேற்கண்ட பாடலானது, ஐம்பொறிகளைத் தீயவழியில் செலுத்தாது அடங்கி நிற்கும்படி நடத்;தல், அரசனுக்கு வருவதாகிய தீங்கை வராதபடி முன்காத்தல், நாள்தோறும் பகைவர்களது நிலையை ஒற்றர்களால் அறிந்து, அதற்கேற்றவாறு நடத்தல் ஆகிய இம்மூன்றும் புகழ்பெற்ற பெருமைமிக்க அமைச்சர்கள் ஆற்றவேண்டிய செயல்களாக இப்பாடல் சுட்டுகிறதுஇவை போன்ற அரசனுக்குரிய தொழில்களையும் ., அரசுக்கு வேண்டியவை பற்றியும், அமைச்சர்களுக்கு வேண்டிய தகுதிகள் பற்றியும் திரிகடுகத்தின் சில பாடல்கள் எடுத்தியம்புகின்றனஅவற்றிற்கு ஒரு சில சான்றுகளையே மேற்கண்ட . .ஆய்வுத்தரவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

மக்களிடம் இருக்கும் செல்வங்களை அதிக வரியாகப் பெற விரும்பிய அரசன் குடிகளைத் துன்புறுத்தி நாட்டின் மழைவளத்தை தடுப்பவன் என வஞ்சிக்கப்பட்டான் என்ற செய்தியை,

***“கொள் பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தன்***
***உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்***
***இல்லிருந் தொல்லை கடப்பாளும் இம்மூவர்***
***வல்லே மழையருக்குங் கோள்” (திரிகடுகம்.50)***

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றனஎனவே ., அரசக் கருவூலத்தை நிரப்புவதற்காக மக்களிடம் மிகுதியாக வரி வசூலிக்கும் போக்கும் அக்காலத்தில் இருந்துள்ளது என்பதனை அறிந்தே இவ்வாறு புலவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனலாம்.

அரசன் தனக்கு உள்நாட்டிலும், அயல்நாட்டிலும் பகையாகக் கூடியவர்களது எண்ணங்களையும், திட்டங்களையும் முன்னதாகவே அறிந்து தன்னிலையை வலுப்படுத்திக் கொள்வதற்கு ஒற்றறியும் நிலையைப் பெற்றிருந்தனர்இதிலும் ., தலைமை ஒற்றன் உள்ளிட்ட தகுதிப்பிரிவுகளும் இடம்பெற்றுள்ளன என்பர்ஒற்றாளன் சொன்ன செய்தியை . உறுதிசெய்து கொள்ள ஒருவரையொருவர் அறியாமல் இருக்கச்செய்தலும், ஒரு செய்தியைப் பற்றி முடிவெடுக்க மூன்று விதமான ஒற்றாளர்கள் கூறும் கருத்தொற்றுமையைக்; கொண்டே அமையவேண்டும் என்பது ஒற்றாளனின் தொழில்நுட்பத்திற்கு அரசர் அளித்த முக்கியத்துவத்தை அறியமுடிகிறதுஎனவே ., இப்பணிக்கு தகுதியுடையவர்களை தேர்ந்தெடுத்தல் பிறரறியாது காணும் திறனும், கேட்ட பொருளை மறவாத கூர்மையும், உள்ளத்திலுள்ளதை உணர்ச்சியோடு சொல்லும் ஆற்றலும் உடையவர்களாக இருக்கவேண்டும் என்கிறார் நல்லாதனார் .- திரிகடுகம் .85

பகைவர் புலத்தில் சென்று செயற்படுதலால் ஒற்றாளனின் பணி மனஉறுதி கொண்டிருக்கவேண்டும்ஒற்றர் பகைவரிடத்தில் பிடிபட்டால் உயிரைப் பறிக்கும் செயலும் . எனவே .நிகழும், உயிருக்கு அஞ்சி தன்னரசின் உண்மையுரைப்பவனாக இருத்தல் கூடாது . இதுபோன்ற நிகழ்வுகளையே தன் பணியாகக் கொண்ட ஒற்றாளனை சமூகத்தார் தீயொழுக்கமுடையவர் என வஞ்சிக்கும் செயலும் நிகழும் .- திரிகடுகம். .55

## சிறுபஞ்சமூலம் வலியுறுத்தும் அரசியல் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் அரசியல் குறித்தான கருத்தாக்கங்களை ஒரு பாடலுக்கு ஐந்தாக எடுத்துரைக்கிறதுசிறுபஞ்சமூலம் என்பது . சிறுவழுதிணைவேர், நெருஞ்சிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், கண்டங்கத்திரிவேர் ஆகிய ஐந்துமாகும்சிறுபஞ்சமூல வேர்களின் பொடியை உட்கொண்டால் உடல்நோய் நீங்கும் . அதுபோன்று சிறுபஞ்சமூலம் கூறும் ஐந்து அரசியல் கருத்துக்களை அரசன் கைக்கொண்டால் அது நல்லாட்சியாகவும், நல்லரசாட்சியாவும் இருக்கும் என்பதான கருத்தாக்கத்தை நாம் ஆராய்ந்து பெறமுடிகிறதுதொடக்ககாலம் தொட்டு அண்மைக்காலம் வரை உள்ள . இலக்கியங்களும், வரலாறுகளும் அரச வரலாறுகளாகவே உள்ளனஅக்கால இலக்கியங்கள் . நீதி இலக்கியங்கள் கூட அரசனுக்குச் சாதகமாகவே .அரசர்களைச் சார்ந்தே எழுதப்பட்டன அவ்வாறு .எழுதப்பட்டனஎழுதப்பட்ட அரசனுக்கு சாதகமான செய்திகள் சிறுபஞ்சமூலத்திலும் காணப்படுகின்றனஅரசர்க்கு எதிரான செய்திகள் ., அரசர்களைப் பற்றி இகழ்ந்துரைக்கும் கருத்துக்கள் இந்நூலில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாட்டிற்கு அரசன் அமிர்தமாவது எப்போது என்பதையும், அரசனுடைய செங்கோலின் அவசியம் எதுவென்பதையும், அரசனுக்கு அழகு எது என்பதையும், செங்கோல் மன்னனுக்கு சிறப்பு எது என்பதையும், குடி உயர்ந்தால்தான் கோன் உயரும் என்னும் கருத்தையும், யாரை நாட்டிற்கு அரசானாக்க வேண்டும் எனும் கருத்தையும், அரசனுக்குத் துணைநிற்கும் அமைச்சனுடைய பண்பு பற்றியும், யாரெல்லாம் அடுத்தபிறவியில் மன்னராகப் பிறப்பர் என்கிற செய்தியையும் முறையே 4, 7, 9, 15, 46, 49, 58, 71, 73 ஆகிய பாடல்களின் வழி சிறுபஞ்சமூலம் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளதுஇவ் . அரசியல் கருத்தாக்கம் எவ்வாறு அரசியல் முறைகளையும், அரசியல் பின்புலத்தையும், அரசு நெறிப்படத் தேவையான கருத்துக்களையும், அரசு உருவாக்கத்தையும் கட்டமைக்கிறது என்பதையும் தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளது.

*"கற்புடைய பெண்ணமிர்து கற்றடங்கி னானமிர்து*
*நற்புடைய நாடமிர்து நாட்டுக்கு - நற்புடைய*
*மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனும்*
*ஆகவே செய்யின் அமிர்து."* *(சிறுபஞ்சமூலம்.4)*

என்னும் மேற்கண்ட பாடலானது, அரசனுக்கு எது நன்மை அரசனால் எது நன்மை, அரசனின் வழி எது நன்மை என்கிற கருத்தியலைப் பொதிந்து அமைந்துள்ளது எனலாம் . சிறுபஞ்சமூலம் பாடலொன்றில் அரசனுக்குச் சிறப்பு எதுவென குறிப்பிடுகையில் அரசனுடைய செங்கோலுக்கு நடுநிலை தவறாத சொல் சிறப்பாகும் எனக் குறிப்பிடுகிறது . பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றில் ஏற்கனவே குறிப்பிட்டது போல் சிறுபஞ்சமூலம் இதனையே .செங்கோல் தவறாமையை மீண்டும் நிலைநாட்ட முயற்சிக்கிறது,

***"படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்***
***இடைதனக்கு நுண்மை வனப்பாம் நடைதனக்குக் -***
***கோடா மொழிவனப்புக் கோறகதுவே சேவகர்க்கு***
***வாடாத வன்கண் வனப்பு." (சிறுபஞ்சமூலம்.7)***

என்ற பாடலும் எடுத்துரைக்கின்றதுமேலும் ., தன் நிலைமை, தன் தொழில் நிலைமை, எதிரி நிலைமை, உலகியல் நிலைமை என்பனவற்றை ஆராய்ந்து தொழில் செய்பவனே அரசன் எனவும், அரசனுக்கு அழகு தன் நாட்டிலுள்ளவர்களை வருத்தமாட்டானென்று பிறர்புகழ்ந்து கூறும்படி வாழ்தலாகும்..சிறுபஞ்சமூலம்) .3,4)

சிறுபஞ்சமூலத்தின் பாடலொன்று அழகு குறித்த சிந்தனைகளைப் பட்டியலிடுகிறது . அவற்றுள் அரசனுக்கு அழகு தன் நாட்டில் உள்ள மக்களை வருத்தமாட்டான் என்றுரைத்தல் என்கிறதுஇதனையே .,

***"கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை***
***எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் பண்வனப்புக்***
***கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு***
***வாட்டான்நன் றென்றல் வனப்பு." (சிறுபஞ்சமூலம்.9)***

என்னும் பாடலடிகளால் இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்கண்ணோட்டம் என்கிற . அதிகாரத்தைப் பொருட்பாலின்கண் அரசியல் பிரிவில் திருவள்ளுவரும் இதனையே .இவ்வதிகாரத்தில் கண்ணோட்டத்தின் சிறப்பையும் விளக்கியுள்ளார் .எடுத்துரைத்துள்ளார்

பண்டைக்கால மன்னர்கள் இறைவனின் தன்மையைப் பெற்றவர்களாகவும், எல்லையில்லாத அதிகாரத்தைப் பெற்றவர்களாகவும் அவற்றையெல்லாம் மக்களின் நன்மைக்கே அவர்கள் பயன்படுத்தினார்கள் என்றும், அதைவிடுத்து அவர்கள் மக்களை வருத்தி தவறான வழிமுறைகளுக்கு அவர்களைப் பயன்படுத்தினால் மக்கள் அரசர்களைத் தண்டிக்கவும் தயங்கவில்லை என்பதை பழங்கதைகளும், புராணங்களும், இம்மண்ணில் நிகழ்ந்த வரலாறுகளும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றனமக்களின் நலன் உயர்ந்தாலே அரசன் . புகழ் உயரும், அத்தகைய புகழுக்கு அடிப்படையாய் இருப்பவை முதலில் உயர வேண்டும் என்னும் கருத்தமைவை உடைய பாடல் சிறுபஞ்சமூலத்தில் இடம் பெறுகிறதுஅதைச் . சொல்ல பெண்ணை அழைத்து அவளிடம் அவள் அறிந்துகொள்ளும்படிச் சொல்லுவதாகப் .பின்வரும் பாடல் அமைகிறது

***“வார்சான்ற கூந்தல்;;; : வரம்புயர வைகலும்***
***நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் சீர்சான்ற -***
***தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்***
***ஓவா துரைக்கும் உலகு.” (சிறுபஞ்சமூலம்.46)***

என்னும் மேற்சொன்ன பாடல் வரிகளில், இங்கு குடிஉயரத் தாங்கு அருஞ்சீர்கோ உயர்தல் என்பது அடிப்படையானவற்றை உயரச்செய்தலைக் காண்பிக்கிறதுவரப்புயர நீர் உயரும் ., நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடிஉயரக் கோன் உயரும் எனும் கருத்தியலைப் படிப்படியாக அடுக்கிக் காண்பிக்கிறதுகுடிகளை வருத்தும் தொழிலை . மேற்கொண்டு, முறையில்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன், கொலைத் தொழிலைக் கொண்டவனை விடக் கொடியவன் என்று பழித்துப் பேசுவார் வள்ளுவர் . .திருக்குறள்)851)

சிறைவாசம் புரிவோர், இறந்தவர் நன்மை பெற வேண்டி உண்ணாது நோன்புடையோர், தாம் கொண்ட நோயின் காரணமாக மருந்துண்டு பத்தியத்தில் இருப்பவர், ஒருநாள் விட்டு ஒருநாள் உண்பவர், வளர்பிறை நாட்களில் உண்ணாது இருப்பவர்களுக்கு உணவளிப்பவர் இவ்;; ஐவரும் மன்னராகி அனைத்தையும் கற்று வாழ்வார் என்ற கருத்தியல்,

***“சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநாள்***
***உறைக்கிடந்தார் ஒன்றிடையிட் டுண்பார் பிறைக்கிடந்து -***
***முற்றனைத்தும் உண்ணா தவர்க்கீந்தார் மன்னவராய்க்***
***கற்றனைத்தும் வாழ்வார் கலந்து.” (சிறுபஞ்சமூலம்.71)***

என்னும் பாடலில் வெளிப்படுகிறதுமேலும் ., வலி அறிந்தவர், முதியவர், வடக்கிருந்து உண்ணாநோன்பு நோற்பவர், நோயினால் நலிந்தவர், தமது நாடு விட்டு நாடுபோய் தளர்ந்தவர் இவ் ஐவரையும் தளர்வு நீங்கும்படி ஒரு கவளம் உணவாவது கொடுத்து ஆதரிப்பவர்கள் மறுபிறவியில் மன்னராகப் பிறந்து மதிப்புடன் வாழ்வார் என்ற கருத்தியலை,

***“வலியழிந்தார் மூத்தார் வடக்கிருந்தார் நோயால்***
***நலிபழிந்தார் நாட்டறைபோய் நைந்தார் மெலிவொழிய -***
***இன்னவராம் என்னாரா யீந்த ஒருதுற்று***
***மன்னவராய்ச் செய்யும் மதித்து.” (சிறுபஞ்சமூலம்.73)***

என்ற பாடலில் வழி சிறுபஞ்சமூலம் உணர்த்துகிறது முந்தைய இரண்டு .பாடல்களில் உண்ணாதிருப்பவரும், பிந்தைய பாடலில் பிறருக்கு உணவளிப்பவரும் மேல் உயர்ந்து கற்றறிந்து பின்னாளில் மன்னராவார் என்கிற சாரத்தையே எடுத்துரைக்கிறதுஇத்தகைய . கருத்துக்கள் நிரம்பிய பாடல்கள் பல சேர்ந்து பெரும் கருத்தியல் மாற்றத்தை அரசர்களிடையே விதைக்கும் இலக்கோடு இவை பாடப்பட்டிருக்கலாம் .

## ஆசாரக்கோவை வலியுறுத்தும் அரசியல் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஆசாரக்கோவை என்பது தனித்த ஆய்வுக்குரியது . ஆசாரம் .இதனை இயற்றியவர் வன்கயத்தூர் பெருவாயின் முள்ளியார் என்பவர் ஆவார் என்பது வாழ்க்கையில் மக்கள் கடைபிடிக்கும ஒழுக்கநெறிகளைக் குறிப்பதாகும்ஆனால் . .இவ்வொழுக்க நெறிகளுள் பல தனித்த மக்களுக்குச் சொல்லப்பட்டவையாக இருக்கின்றன அத்தகைய முறையில் மன்னனுக்கு அரசியல் வழிமுறைகளையும், ஏற்கனவே கடைபிடித்த அரசியல் முறைகளையும் கருத்தாக்கங்களாக ஆசாரக்கோவை கொண்டிருக்கிறதுஅரசனைத் . தேவரைப் போல் நினைத்தல், அரசன் சொல்லுக்கு கட்டுப்படுவோர், மன்னரோடு மக்கள் பழகும் முறை, அரசனுக்குச் சொல்லக்கூடாதவை, மன்னனின் மதிப்பைப் பெற விரும்புவோர், அரசர் முன்னிலையில் செய்பவை, அரசர் முன்னிலையில் செய்யத்தகாதவை, அரசன் முன்னே சொல்லக்கூடாதவை, அரசன் முன்னே செய்யக்கூடாதவை, மன்னர் அவையில் செய்யக்கூடாதவை, மன்னனோடு செல்லக்கூடாத இடங்கள், இழக்கக்கூடாதவர்களில் அரசனும் அடங்குவான், மன்னன் செய்யாதவை, அரசத்தொழில் செய்பவனுக்கு ஆசாரத்திலிருந்து விலக்கு ஆகிய கருத்தாக்கங்கள் முறையே 16, 17, 66, 69, 70, 71, 73, 78, 81, 84, 85, 100 ஆகிய பாடல்களின் வழியே நிகழ்ந்திருக்கின்றன.

ஆசாரக்கோவை பாடலொன்று உலகத்தார் பொதுவாகக் கொண்ட நெறிகளில், ஐவரைத் தேவர்களைப் போலக் கருதி போற்றித்தொழுதல் வேண்டும் என குறிப்பிடுகையில் அவர்களுள் அரசனையும் குறிப்பிடுகிறார்இச்செய்தியை பின்வரும் பாடலடிகள் . நிறுவுகின்றன .

*"அரசன் னுவாத்தியான் றாய்தந்தை தம்மு*
*னிகரில் குரவ ரிவரிவரைத்*
*தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே*
*யாவருங் கண்ட நெறி."* *(ஆசாரக்கோவை.16)*

கடைசி வரையில் இடையூறு இன்றி வாழ்தல் வேண்டும் என்று கருதுபவர் ஆற்ற வேண்டிய செயல்களாகக் குறிப்பிடும் ஆசாரக்கோவையின் 66 ஆவது பாடல் மன்னரோடு மற்றவர் பழகும் முறையைத் தெளிவாக உரைக்கிறது.

*"கடைவிலக்கிற் காயார் கழிகிழமை செய்யார்*
*கொடையளிக்கட் பொச்சாவார் கோலநேர் செய்யார்*
*இடையறுத்துப் போகிய பிறனொருவற் சேரார்*
*கடை போக வாழ்துமென் பார்"* *(ஆசாரக்கோவை.66)*

என்ற வரிகளில் இடம்பெற்றுள்ள பொருண்மையாவது, அரண்மனை வாயிலில் தம்மைத் தடுத்தால் சினம்கொள்ள மாட்டார் .உரிமையை மன்னர்க்கு இல்லாதவாறு செய்யமாட்டார் . அரசனுக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தை மறந்தும் செலுத்தாமல் இருக்கமாட்டார் . முன்னர் அவையில் இடையே .அரசனுக்கு நிகராகத் தம்மை அலங்காரம் செய்யமாட்டார்

சென்று வேறு ஒருவருடன் பழகமாட்டார் என்னும் கருத்தியலை மக்களுக்கும் .மற்றவர்களுக்கும் எடுத்தோதுவதாக மேற்கண்ட பாடலின் கருத்தமைகிறது

அரசனின் செயலை வெறுக்காமல், அரசனுக்குக் கோள் சொல்லாமலும், அரசன் எதிரில் நிற்காமலும், அரசன் தனித்து இருக்கும்போது தமது குறையைச் சொல்லாமலும், நன்மை தருவனவற்றை யாம் அறிவோம் என்று தாமே சொல்லாமலும், காகம் வெள்ளை நிறம் என்றாலும் அதை மறுத்துப் பேசாமலும் இருப்பவர்கள் அரசனின் மதிப்பைப் பெற விரும்புபவர்களாவர் எனும் கருத்தினை,

***“முனியார் துனியார் முகத்;தெதிர் நில்லார்***
***தனிமை யிடத்துக்கட் டங்கருமஞ் சொல்லா***
***ரினியவை யாமறிது மென்னார் கசிவின்று***
***காக்கைவெள் ளென்னு மெனின்.”*** ***(ஆசாரக்கோவை.69)***

எடுத்துரைக்கிறது மேற்கண்ட இப்பாடல்இவை மட்டுமல்லாது மன்னர் முன்னே . செய்யக்கூடாதவையும், மன்னர் முன்னே சொல்லக்கூடாதவையும், மன்னனிடத்தே சொல்லக்கூடாதவையும் பற்றியும் ஆசாரக்கோவை அரசு பற்றிய கருத்தாக்கங்களை மக்களிடம் பரப்ப முயற்சித்துள்ளது.

எச்சில் உமிழ்தலும், உயர்வான ஆசனத்தில் அமர்தலும், தாம்பூலம் போடுதலும், தகுதியில்லாதனவற்றைக் கூறுதலும், உறங்குதலும் ஆகிய இச்செயல்கள் பாடல் 70 திலும், வெடிப்புச் சிரிப்பு சிரித்தலும், கொட்டாவி விடுதலும், எச்சிலைத் துப்புதலும், உமிழ்தலும், தும்முதலும் ஆகிய செயல்கள் பாடல் எண் 73 லும் அரசன் முன்னே செய்யக்கூடாதவை என்பவையாக ஆசாரக்கோவை பாடல்கள் வழி முன்வைக்கப்பட்டுள்ளது.

தமது செல்வத்தைப் பற்றி கூறுதலும், தமது கல்வியைப் பற்றி பேசுதலும், தமது பொருள்களின் விளக்கத்தைக் கூறுதலும், தமது குணாதிசயங்களை தெரிவித்தலும் ஆகிய இவை அரசன் முன்னே சொல்லக்கூடாதவை எனவும் அவ்வாறு கூறின் அது தற்புகழ்ச்சியாகலாம் என்னும் கருத்தினை,

***“இறைவர்முன் செல்வமுங் கல்வியுந் தேசுங்***
***குணனுங் குலமுடையார் கூறார் பகைவர்போற்***
***பாரித்துப் பல்காற் பயின்று.”*** ***(ஆசாரக்கோவை.71)***

என்னும் ஆசாரக்கோவையின் பாடலடிகள் தெரிவிக்கின்றதுஆசாரக்கோவையின் . பாடல்கள் பெரும்பாலும் அரசனுக்கு அரச அறத்தைச் சுட்டிக்காட்டும் பாடல்களைவிட அரசனுடன் அமைச்சர் முதலிய மற்றோர் நடந்துகொள்ளும் முறைகள் பற்றியே அதிகம் குறிப்பிட்டுள்ளன எனலாம்திரும்பத் திரும்ப பற்பல பாடல்களில் மன்னரிடம் . சொல்லத்தகாதவை, செய்யத்தகாதவை, மன்னனுடன் செல்லக் கூடாத இடங்கள் என இவை வலியுறுத்தப்படுவதின் பின்னணியினைப் பார்க்கும் பொழுது இவை அக்கால அரசியல்

கட்டமைப்பின் நேர்த்தியைக் குறிப்பிடுவதாக மட்டுமல்லாமல் தமிழ்ச்சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் விளக்குகிறது எனலாம்.

மேலும், அரசன் கூத்து முதலிய களியாட்டத்திலும், அந்தப்புரத்திலும் தன் நேரத்தை செலவிடும்போது சான்றோர்கள் அங்கு செல்லும் வழக்கமில்;லை என்ற கருத்தும் அசாரக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளதுசான்றாக .,

***"புழைக்கடைப்பு காரரசன் கோட்டி யுரிமை***
***இவற்றுக்கண் செவ்வியார் நோக்காரே யவ்வத்***
***தொழிற்குரிய ரல்லா தவர்."*** ***(ஆசாரக்கோவை.81)***

என்ற வரிகளால் மேற்கண்ட செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது . நாட்டை ஆளும் அரசனை இகழுதல் கூடாதெனச் சொல்லும் கருத்தினை பாடல்84 தெரிவிக்கிறதுமன்னன் தான் வாழும் மனையை அரண்மனையை விடப் பெரியதாக . அமைக்கமாட்டான் என்னும் கருத்தும் உணர்த்தப்பட்டுள்ளது.

ஆசார ஒழுக்கம் என்பது கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டியவை என அக்காலத்தில் எடுத்துரைத்தவர்கள், அரசு சார்ந்து தொழில் செய்பனுக்கு மட்டும் விலக்கு அளித்திருக்கிறார்கள்காரணம் அரசத்தொழில் செய்பவர்கள் முற்றிலுமாக மன்னனின் . விருப்பு வெறுப்புகளுக்குக் கட்டுப்பட்டவராவார்கள்ஆனால் ., அவர்கள் அந்தணர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லஏனெனில் ஆசாரங்களில் சொல்லப்பட்ட மற்ற ஒழுக்கங்கள் . பெரும்பாலும் அந்தணரைப் பாதுகாக்கவும், மற்றவரிலிருந்து அந்தணரைத் தணித்துக் காட்டவும் புனையப் பட்டவையாக இருந்திருக்கின்றனஅதனாலேயே அரசத் தொழில் . அதனால் அவனுக்கு விலக்கு அளித்துச் .செய்பவனுக்கு அந்தணர் எதிரியாக முடியாது இது அந்தணரின் .சலுகை வழங்கியுள்ளனர் என்பது வெளிப்படப் புலனாகிறது இச்செய்தியினை .கருத்தியலிருந்து அளிக்கப்பட்ட புதிய கருத்தாக்கமாகும்,

***"அறியாத தேயத்தா னாதுலன் மூத்தான்***
***இளையா னுயிரிழந்தா னஞ்சினா னுண்பான்***
***அரசர் தொழிறலை வைத்தான் மணாளனென்***
***றொன்பதின்மர் கண்டீ ருரைக்குங்கான் மெய்யான***
***ஆசாரம் வீடு பெற்றார்"*** ***(ஆசாரக்கோவை .100)***

என்ற பாடல் வரிகளும் உறுதிசெய்கின்றன.

## ஏலாதி வலியுறுத்தும் அரசியல் அறம்

அரசியல் கருத்தாக்கங்கள் ஏலாதியில் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என ஆராயும்பொழுது, அரசனை இரு திறத்தினால் புறக்கணித்தல், அமைச்சருக்குரிய தகுதிகள், மறுபிறவியில் அரசனாகுபவர் யார், இந்நாட்டையாள்பவர் யார் எனும் கருத்துக்கள் முறையே

10, 17, 36 ஆகிய பாடல்களிலும், அரசனாகுபவர் செய்யவேண்டிய செயல்கள் முறையே 42, 45, 48, 52, 53, 54, 57, 58, 59, 70, 80 ஆகிய பாடல்களிலும் ஆக மொத்தம் 14 செய்யுட்களில் அரசு, அரசன், அமைச்சன் குறித்த அரசியல் கருத்தாக்கங்கள் இடம்பெறுகின்றன .

முறைசெய்து ஆட்சி செய்யும் மன்னன், அவன் கீழ் வாழும் குடிமக்கள், அவர்களது செல்வங்கள் ஒருபுறமும், முறையற்று ஆட்சி செய்யும் கொடுங்கோலன் அவன் கீழ் வாழும் குடிகள் மறுபுறம் இருக்க, இவ்விரு அரசர்களின் கீழ் வாழும் அமைச்சர்கள் ஆகிய இவ்விருவரின் திறனையும் அறியமாட்டோம்தீயவரும் .நல்லவரும் கெடுகின்றார் . ஆகலின் இவற்ற .கெடுகின்றனர்ிற்குரிய உண்மையான காரணம் அறிய முடியவில்லை என்கிறார் ஏலாதியின் ஆசிரியர்அரசனது ஆட்சி தமக்கு நன்மை பயக்குமா அல்லது தீமை . காரணம் .பயக்குமா என ஆராயும் புலம்பல் அவரது பாடல் பதிவுகளில் வெளிப்படுகிறது அரசனது ஆட்சி அத்தகைய இரட்டைத் தன்மையுடன் அக்காலத்தே அவனுடைய சுயவிருப்பு வெறுப்புக்கேற்ப இருந்திருக்கிறது என்பதையும் இப்பாடலின் வழி அறியமுடிகின்றது . இக்கருத்தினை,

**"செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா**
**வெங்கோலன் கீழ்க்குடிகள் வீந்துகவும் வெங்கோல் -**
**அமைச்சர் தொழிலு மறியலமொன் றாற்ற**
**எனைத்து மறியாமை யான்."** **(ஏலாதி.10)**

என்னும் ஏலாதியின் மேற்கண்ட பாடலடிகள் உணர்த்துகின்றனமன்னனுக்குத் துணைநின்று . அவனது செங்கோலாட்சிக்குத் துணை நிற்பவர்கள் அமைச்சர்கள், அவர்களின் செயல்களே அரசவையை முறைப்படுத்தும்அத்தகைய நெறிமுறையுள்ள அமைச்சர்கள் செயலே . என .நல்லரசாக அமைய வழிவகுக்கும்வே, அமைச்சர்களை எத்தகைய வழிகளில் அமைக்கலாம் என்பது பற்றி ஏலாதியின் 17 ஆவது பாடல் அறிவுறுத்துகிறது.

***"குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்***
***மடியோம்பு மாற்ற லுடைமை - முடியோம்பி***
***நாற்றஞ் சுவைகேள்வி நல்லா ரினஞ்சேர்தல்***
***தேற்றானேற் றேறு மமைச்சு."*** ***(ஏலாதி.17)***

என்னும் பாடலானது, குடிமக்களைப் பாதுகாத்தல், வலியுடையவனாய் இருத்தல், கல்வி கேள்வியில் புலமையுடையவனாய் இருத்தல், வஞ்சனை சோம்பல் முதலியவற்றை விட்டிருத்தல், ஆற்றலுடன் எல்லாச் செயல்களையும் செய்பவனாய் இருத்தல், மணமிக்க பொருள், நாவிற்கினிய உணவு, செவிக்கினிய இசை, மாதர் கூட்டத்தைச் சேர்தல் ஆகிய புலன்வழிச் செயல்களைக் கைவிட்டு இருத்தல் முதலியவற்றோடு ஒருவன் இருப்பானானால் அவன் அமைச்சனாவதற்குரிய தகுதிகளை உடையவன் ஆவான் .

எல்லாவற்றையும் துறந்த துறவிகளுக்கும், எதனையும் துறவாது இல்வாழ்வாராக இருந்து விருந்தினராக வருபவருக்கும், ஒன்றுமில்லாத வறியவருக்கும், காணப்படாத

தென்புலத்தாருக்கும், தனக்கு ஒப்பில்லாத ஏழைகளுக்கும், துணையற்ற சிறுவர்களுக்கும் சான்றோர்களுக்கும் நல்வழியில் தேடிய உணவைப் பகுத்துக் கொடுப்பவன் மறுபிறவியில் அரசனாய் உலகத்தை ஆள்வான் என்னும் கருத்தினை விதைக்கிறதுஇக் .கருத்தினை,

***"துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்றா***
***திறந்தா ரீடற்றா ரினையர் சிறந்தவர்க்கும் -***
***பண்ணாளுஞ் சொல்லாய் பழியிலூண் பாற்படுத்தான்***
***மண்ணாளு மன்னனாய் மற்று." (ஏலாதி.35)***

என்னும் மேற்கண்ட பாடலடிகளும் எடுத்துரைக்கின்றன பிற உயிர்களைக் .கொல்லாமலும், பிறர் சொல்லுக்கு உடன்படாமலும், கொல்லுபவரோடு சேராமலும், ஊன் உண்ணுதலை மேற்கொள்ளாமலும், தனது குடும்பத்தை நன்நிலையில் வைத்து பிறருக்கு உணவு அளிப்பவன் எவனோ அவன் உலகத்தை அரசாள்வதோடு, கொல்லும் தன்மையுள்ள யானையின் மேலேறி ஏனைய அரசர்களைத் தனக்கு அடங்கிச் செய்கின்ற மேன்மையை அடைவான் என்பதனை,

***"கொல்லா னுடன்படான் கொல்வாரினஞ் சேரான்***
***புல்லான் பிறர்பாற் புலான்மயங்கல் செல்லான் -***
***குடிப்படுத்துக் கூழீந்தான் கொல்யானை யேறி***
***அடிப்படுப்பான் மண்ணாண் டரசு." (ஏலாதி .42)***

என்னும் பாடலும், வழிபாட்டு நெறியிலிருந்து தவறாமலும், துன்பந்தரும் தீய செயல்களைப் பிறருக்குச் செய்ய விரும்பாமலும், இல்லற வாழ்க்கையினின்று நீங்காமலும், பிறர் பொருளைக் கவராமலும், நன்னடத்தையில் நடந்து குற்றமற்ற உணவை விருந்தினர்க்குக் கொடுத்து வாழ்பவன் பகைவரை வென்று அரசாள்பவன் எனும் கருத்தை,

***"இழுக்கா னியனெறி யின்னாக வெஃகான்***
***வழுக்கான் மனைபெருள் வௌவான் ஒழுக்கத்தால் -***
***செல்வான் செயிரிலூ ணீவா னரசாண்டு***
***வெல்வான் விடுப்பான் விரைந்து." (ஏலாதி .45)***

என்ற பாடலும், தீயசொற்களைப் பேசாமலும், விருந்தினர்க்குப் பொருளை மறைக்காமலும், தன்வீட்டில் இனிய சொற்களைப் பேசி உணவளித்தலும், அவர்களுக்கு அளித்துத் தானும் உண்ணுதலும், பகைவரது சொற்களைக் கேளாமலும், தன் உறவினரைப் பாதுகாப்பனாயின் அழிவில்லாத நிலையான அரசுரிமையைப் பெறுவான் என்ற கருத்தமைவை,

***"வேற்றரவஞ் சேரான் விருந்தொளியான் தன்னில்லுள்***
***சோற்றரவஞ் சொல்லியுண் பானாயின் -மாற்றரவங்***
***கேளான் கிளையோம்பிற் கேடி லரசனாய்***
***வாளான்மண் ணாண்டு வரும்." (ஏலாதி .48)***

என்ற பாடலும், வீட்டை இழந்தவர்களுக்கும், கண்ணை இழந்தவர்களுக்கும், சேர்த்து வைத்த செல்வத்தை இழந்தவர்களுக்கும், விளைந்த நெல்லை இழந்தவர்களுக்கும், பசுக்கூட்டத்தை இழந்தவர்களுக்கும், வெயிலில் வருந்தி பொருளீட்டி உணவு கொடுத்தவர் யானைகளோடு கூடிய அரசராய்ப் பலராலும் மதிக்கப்பட்டு மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தார் சூழ இன்சுவை உணவினை உண்ணும் பேறு பெறுவர் என்னும் செய்தியை,

> ***"இல்லிழந்தார் கண்ணிழந்தா ரீண்டியசெல் வம்இழந்தார்***
> ***நெல்லிழந்தா ரானிரை தானிழந்தார்;க் கொல்லுழந்து -***
> ***பண்ணியூ ணீய்ந்தவர் பல்யானை மன்னராய்***
> ***எண்ணியூண் ணார்வா ரியைந்து."*** *(ஏலாதி.52)*

என்ற பாடல்களிலும் உணர்த்தியுள்ளனர்அதுமட்டுமல்லாது இன்னும் பிற பாடல்களும் . அரசனாகுபவர் செய்யவேண்டிய செயல்களையும் அவ்வாறு செய்வதால் குறைவிலாத செல்வமுடைய அரசனாவான் என்னும் கருத்தமைவை அக்காலப் புலவர்கள் அரசர்கள் மற்றும் மக்களிடையே உருவாக்கியுள்ளனர் எனலாம்ஏலாதியின் பாடல்களில் வரும் . அரசியல் கருத்தாக்கங்கள் மன்னனை மையமிட்ட கருத்துக்களாக அவன் ஆற்றவேண்டிய பணிகளாக எடுத்துக்கூறுவதை ஆராய்ந்தறிய முடிகிறதுபெரும்பாலும் நலிந்தோருக்கும் ., இல்லாதோருக்கும், பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கும், ஊனமுற்றவருக்கும் உதவுதலையே ஒரு நாட்டின் அரசனானவன் செய்யவேண்டும் என்ற சிந்தனைகளை மேற்கண்ட பாடல் கருத்துக்களின் வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## இன்னாநாற்பது வலியுறுத்தும் அரசியல் அறம்

இன்னா என்பது கெடுதல் உடையது என்பதனால் அதனை விலக்குதல் அல்லது நீக்குதல் வேண்டும் என்று இந்நூல் வழி உணர்த்தப்பட்டுள்ளதுஉடன்பாட்டு வினையில் . இனியது என்று சாற்றும் வகை ஒருபுறம் இருக்க எதிர்மறைக் கருத்தால் இன்னாதது என எடுத்துரைக்கும் நோக்கில் அரசனுக்கு வேண்டாதவை பற்றியும், அரசியலுக்கு வேண்டாதவை பற்றியும் இன்னாதவை எனும் குறிப்பில் இந்நூல் அரசியல் குறித்த கருத்தாக்கங்களைக் கொண்டிருக்கிறதுஅரசியல் கருத்தாக்கங்களை நுட்பமாக ஆராய்ந்தவிடத்து ., அவை காவல் செய்யாத அரசன் பற்றியும், கொடுங்கோல் அரசன் பற்றியும், நீதி தவறும்முறை பற்றியும், அரசனுக்குத் துன்பம் வருவது பற்றியும், படையில்லாத மன்னன் பற்றியும், வீரமில்லாத மன்னரின் திறம் பற்றியும் முறையே 2, 3, 5, 13, 22, 38 ஆகிய ஆறு பாடல்களின் வழியே இன்னாநாற்பது என்னும் இந்நூல் அரசியலை எடுத்துரைக்கிறது .

குடிமக்களைக் காத்தல் என்பது அரசனின் முதல் கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது . அதாவது, இயற்கை அழிவுகளிலிருந்தும், பகையரசனின் தீங்கிலிருந்தும், உள்நாட்டுப் பூசலிலிருந்தும் காக்காத அரசனின் ஆட்சி கொடுங்கோலாட்சியாகவும், துன்பத்தின் உச்சத்தை விளைவித்தவனாகவும் அவன்கீழ் வாழும் மக்களின் நிலை நீதியற்றும் நிலையற்றுமே

காணப்படும் என அக்காலப்புலவர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளனகொலைத்தொழில் . புரியும் அரசனின் ஆட்சியின் கீழ் வாழ்தலும், தன் நாட்டு குடிமக்களைக் காக்காத வேந்தனால் எந்நாளும் துன்பமே உண்டாகும் என்னும் கருத்தை,

***"பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா***
***ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா***
***பாத்தில் புடைவை யுடையின்னா வாங்கின்னா***
***காப்பாற்ற வேந்த னுலகு."*** ***(இன்னாநாற்பது.2)***

என்னும் பாடலும், இதே கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக கொடுங்கோல் மன்னன் ஆட்சியின் கீழ் வாழ்தல் துன்பம் உடையது என்னும் செய்தியை,

***"கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா***
***நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா***
***கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா***
***தடுமாறி வாழ்த லுயிர்க்கு.""*** ***(இன்னாநாற்பது.3)***

என்னும் பாடலும் எடுத்துரைக்கின்றனநீதிநெறி தவறி நாட்டை . ஆளும் அரசனின் ஆட்சி துன்பம் உடையது என்ற கருத்தமைவையும், அமைச்சர் முதலானோரின் ஆலோசனை இல்லாது செய்யும் செயலும் துன்பம் உடையது என்ற கருத்தியலையும் தாங்கி,

***"சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா***
***உறைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா***
***முறையின்றி யாளு மரசின்னா வின்னா***
***மறையின்றிச் செய்யும் வனை."*** ***(இன்னாநாற்பது.5)***

என்ற பாடலின் அடி எடுத்துரைக்கின்றனகீழ்க்கணக்கு நூல்கள் முழுமையையும் ஆராய்ந்து . பார்க்கும்பொழுது முறைதவறி ஆட்சிபுரிந்த மன்னன் பற்றிய செய்தித் தொடர்ந்து அதன் தொடர்ச .சொல்லப்படுவது கவனத்திற்குரியது்சியாக இன்னாநாற்பதில் நீதி தவறும் அரசன் பற்றிய குறிப்பு சில பாடல்களில் காணப்படுகின்றனஅதனால்தான் நீதி நெறியை . .அறிவுறுத்தும் பாடல்கள் பல வருவதற்குக் காரணமாக அமைந்திருக்க முடியும் எனலாம்

மணிகள் கட்டப்பெறாது ஓசைகள் இன்றிச் செல்லும் யானை மீது அரசன் ஏறிச் செல்லுதல் துன்பம் தரும் எனவும், வலிமை மிக்க வேந்தர்கள் தம்மினும் குறைந்த வலிமையுடைய வேந்தர்களை வணங்குவது துன்பம் தரும் என்று பின்வரும் பாடல் அறிவுறுத்தியுள்ளன.

***"மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா***
***துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா***
***பணியாத மன்னர்ப் பணிவின்னா வின்னா***
***பிணியன்னார் வாழு மனை."*** ***(இன்னாநாற்பது.13)***

ஒரு நாட்டின் அரசன் என்பவன் நால்வகைப் படைகளான தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை போன்றவற்றை தன்னரசன் பாதுகாப்பிற்குக் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்குறிப்பாக ., யானைப் படையில்லாத மன்னரைக் காண்பது பெரும் துன்பமாகும்இச்செய்தியை .,

***"யானையின் மன்னரைக் காண்ட லனியின்னா***
***ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா***
***தேனெய்நய் புளிப்பிற் சுவையின்னா வாங்கின்னா***
***கான்யா றிடையிட்ட வூர்." (இன்னாநாற்பது.22)***

என்ற பாடல் உணர்த்துகின்றதுஇத்தன்மையை நேரிடையாக விளக்கமுற்படும் இனியவை . நாற்பதின்4 ஆவது பாடல் யானைப் படையோடு விளங்கும் அரசன் நன்மையை அடைவான் என்றும், அரசனுக்குப் படைகள் பல அவசியம் அதிலும் யானைப்படை மிகமிக அவசியம் எனும் கருத்தாக்கத்தை இப்பாடல்கள் சுட்டியுள்ளது எனலாம்போரில் படைகளைப் . பெற்றிருப்பதைப் போலவே, படைக்கலன்களையும் இழக்காமல் காத்து புறமுதுகிடுதல் துன்பந்தரும் என்பர்இதனையே .,

***"கருவிகண் மாறிப் புறங் கொடுத்த லின்னா" (இன்னாநாற்பது.4)***

***"இகலி னெழுந்தவ ரோட்டின்னா யின்னா" (இன்னாநாற்பது.8)***

என்னும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன .

வீரம் இல்லாத மன்னர்கள் போர்க்களம் புகுதல் இன்னா எனவும் அது துன்பம் தரும் என்றும் கூறுகிறதுஇதனையே .,

***"பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா***
***மறமிலா மன்னர் செருப்புகுத லின்னா***
***வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா வின்னா***
***திறனிலான் செய்யும் வினை." (இன்னாநாற்பது.38)***

என்ற பாடலால், மன்னருக்கு வீரமின்மை துன்பத்தைத் தரும் எனவும், வீரம் ஒரு மன்னனுக்கு எத்தகைய முக்கியம் என்பதையும் அறிவுறுத்துகிறதுஇதன் மூலம் . வீரமில்லாமல் வெறும் .அக்காலத்தே எல்லா மன்னரும் வீரமுடையவர்கள் அல்லர் ஆட்சிப்பொறுப்பில் இருந்த மன்னர்களும் இருந்தனர் என்பதை இது காட்டுகிறது.

## இனியவை நாற்பதில் அரசியல் கருத்தாக்கம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இனியவை நாற்பது மக்களுக்கு நன்மையை எடுத்துரைக்கும் விதமாக பாடல்கள்தோறும் நல்லறக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறது .

ஒவ்வொரு பாடல்களிலும் மூன்று கருத்துக்களையும் சிலவற்றில் மட்டும் நான்கு அறக்கருத்துக்களையும் கொண்டு மொழியப்பட்டுள்ளனஇனியவை நாற்பதின் பாடல்களில் . அரசியல் கருத்தாக்கங்களை ஆராய்கின்றபொழுது, அரசனின் படை, அரசனின் செங்கோலாட்சி, வீரம்மிக்க அரசனின் நிலை, குடிகளின் மீது அன்பில்லாத அரசன், அரசனின் சேனைகள், முறை செய்யும் அரசன் போன்ற இக்கருத்தாக்கங்கள் முறையே 4, 5, 7, 15, 32, 33, 35 ஆகிய ஏழு பாடல்களின் வழியே எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அரசன் யானைப் படை கொண்டிருப்பது மிகவும் இனியது என்ற கருத்து,

***"யானை யுடைய படைகாண்டல் முன்இனிதே***
***யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்இனிதே***
***கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே***
***மான முடையார் மதிப்பு."*** ***(இனியவை நாற்பது.4)***

என்ற பாடலின் அடியிலும், போர்க்களத்திலே கரிய மலைபோன்ற யானைகள் வெகுண்டு எழும் போரைக் காணுதல் இனிதெனக் கருதப்பட்டதுஇதனையே .,

***"..................வெஞ்சமத்துக்***
***கார்வரை யானைக் கதங்காண்டன் முன்இனிதே"*** ***(இனியவை நாற்பது.8)***

என்னும் இப்பாடலடிகள் உணர்த்துகின்றனமேலும் .,

***"சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே"*** ***(இனியவை நாற்பது.38)***

என்னும் வரிகளில் புலப்படும் பொருண்மையாவது, இளம் வீரர்களைப் போர்வீரர்களாகப் பெற்ற அரசனது படைபலம் இனிது என்கிறார் இந்நூலாசிரியர்மேலும் ., மக்கள்பால் அன்புடையவனாய் விளங்கிப் படையை ஆளுந்தன்மை நன்மையுடையது என்ற கருத்தையும்,

***"அந்தண ரோத்துடைமை ஆற்ற மிகஇனிதே***
***பந்தம் உடையான் படையாண்மை முன்இனிதே***
***தந்தையே ஆயினுந் தானடங்கா னாகுமேற்***
***கொண்டடையா னாகா லினிது."*** ***(இனியவை நாற்பது.7)***

என்னும் பாடல் அடிகளால் முன்மொழிகிறார் என்பதனை அறியமுடிகின்றதுஅரசன் . செங்கோலாட்சி புரிதல் இனிது என்ற செய்தியும், ஒரு பக்கம் சார்ந்து நீதி கூறாமல் இருத்தல் இனிது என்ற செய்தியும்,

***"கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயஞ்***
***செய்யாமை முன்இனிது செங்கோலன் ஆகுதல்***
***எய்துந் திறத்தால் இனிதென்ப யார்மாட்டும்***
***பொல்லாங் குரையாமை நன்று."*** ***(இனியவை நாற்பது.5)***

என்ற பாடலின் அடிகளில் பதிவு செய்யப்பட்டிருப்பது மிகுந்த ஆய்வுக்குரியதுஒரு சாரர் . பக்கம் நீதி வழங்கியமுறை அக்காலத்தே அரசரிடம் இருந்திருக்கிறது என்பது மேற்காணும் பாடலின் வழி புலனாகிறதுஇங்கு மாராயம் என்பது அரசனால் செய்யும் சிறப்பு என்பார் . அரசன் நீதி தவறாமல் ஆட்சி செலுத்துவதே மிக இனிதென .நச்சினார்க்கினியார்,

*"................... செங்கோலன் ஆகுதல்*
*எய்துந் திறத்தால் இனிதென்ப........"* *(இனியவை நாற்பது.5)*

என்னும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றனவீரம் மிக்க அரசர்களின் வாயிற் புறத்தில் மதம் . கொண்ட யானைகளின் பிளிற்றொலியைக் கேட்டல் இனிது என்பதனை,

*"பிறன்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற*
*வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே*
*மறமன்னர் தங்கடையுண் மாமலைபோல் யானை*
*மதமுழுக்கங் கேட்டல் இனிது."* *(இனியவை நாற்பது.15)*

என்னும் பாடல் வரிகளால் விளக்கியுள்ளார்அக்காலத்தே குடிமக்களின்பால் கொடும் ஆட்சி . புரியும் அன்பில்லாத அரசன் ஆளும் நாட்டில் வாழ்வதைத் தவிர்ப்பது இனியதென இனியவை நாற்பதின் இப்பாடல் அறிவுறுத்துகிறதுஅவையாவன .,

*"கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருள்இனிதே*
*பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்இனிதே*
*தெற்றென இன்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்*
*பத்திமையிற் பாங்கினியது இல்."* *(இனியவை நாற்பது.32)*

இப்பாடல் வரிகளானது, அரசருக்குக் குடிமக்களின் மீது அன்பில்லாமையாயின் அவர்களது குறைகளை நீக்குதலும், முறையான அரசு செய்தலின் இல்லையாதலால் பற்றமையா வேந்தனுக்குக் கீழே வாழாமை இனிதென கூறுகிறார் இந்நூலாசிரியர்.

வேற்றிமேவும் வேல் ஏந்திய மன்னன் ஒற்றர்கள் வாயிலாக எல்லா இடத்திலும் நிகழ்வனவற்றை அறிந்து ஆராய்தல் இனியதுகுற்றத்தை நன்கு ஆராய்ந்து பின்னர் . தண்டனை அளிப்பது அரசருக்கு இனியது, விருப்பு வெறுப்பின்றி எல்லா உயிர்களுக்கும் பொதுவாக இருந்து சீர்தூக்கிப் பார்த்தல் அரசனுக்கு மிக இனியது எனும் கருத்தாக்கங்கள் இனியவை நாற்பதில் காணப்படுகின்றனகுற்றத்தை ஆராய்ந்து அறியாமல் நீதி வழங்கிய . அரசர்கள் அக்காலத்தே இருந்தனர் எனக்கூறும் பொழுது இங்கு சிலப்பதிகாரத்தை இக்கருத்தினையே .உதாரணமாய்க் கொள்ளலாம்,

*"ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரிதல் முன்இனிதே*
*முன் தான் தெரிந்து முறைசெய்தல் முன்இனிதே*
*பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்*
*வெற்றிவேல் வேந்தர்க்கு இனிது."* *(இனியவை நாற்பது..35)*

என்னும் பாடலடிகளால் இந்நூலாசிரியர் முறையாக முன்மொழிகிறார்.

## முதுமொழிக்காஞ்சி வலியுறுத்தும் அரசியல் அறம்

முதுமொழி முதுசொல் என்பன பழமொழியைக் குறிக்கும், காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும் .'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே' என்கிறது தொல்காப்பியம் நூற்பாஇவ்விரு சொற்களால் குறிப்பிடப்படும் இந்நூல் நிலையாமை . மாறாக உலகியல் உண்மைகளைத் .குறித்தோ பழமொழியைப் பெற்றோ அமையவில்லை .தெளிவாக எடுத்துரைக்கிறது

முதுமொழிக்காஞ்சியில் அரசியல் கருத்தாக்கம் குறித்து ஆய்வுசெய்த போது 3 பாடல்களில் அரசன், அரசு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றனபத்து அதிகாரம் அமைந்த . அவற்றுள் மூன்றாவதாக .தலைப்புகளின் கீழ் பத்துப்பத்து பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன இருக்கும் பழியாப்பத்தின்6 ஆவது பாடலில் முறை இல்லாத அரசாளும் நாட்டின் நிலைகுறித்தும், 9 ஆவதாக இருக்கும் நல்கூர்ந்தபத்தின் 1 ஆவது பாடலில் முறை தவறிய நாடு அடையும் நிலை குறித்தும், 10 ஆவதாக இருக்கும் தண்டாப்பத்தின் 9 ஆம் பாடலில் முறைப்படி அரசாளும் அரசனின் இயல்புகள் குறித்ததுமான அரசியல் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன .

நடுநிலைமை இல்லாத அரசன் ஆளும் நாட்டிலிருக்கும் அறிஞர் அவனது முறையற்ற அரசை பழித்துரைக்கமாட்டார்காரணம் அவ்வரசன் தன்னைப் பழிப்பவரை கட்டாயம் . .ஒழித்துவிடுவான் அதனாலேயே எவரும் மன்னருக்கு அஞ்சி பழியார் எனும் கருத்தாக்கத்தைத் தாங்கிய செய்யுளொன்றை,

***"முறையி லரசர்நாட் டிருந்து பழியார்"(முதுமொழிக்காஞ்சி.பழியாப்பத்து .6)***

என்ற அடியின் வழி அறியமுடிகிறது.

ஆர்கலியால் சூழப்பட்ட உலகத்தினுள் எல்லா மக்களுக்கும் முறைமை செய்யாத அரசனது நாடு வறுமையுறும் என்ற கருத்தை,

***"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்***

**முறையி லரசனாடு நல்கூர்ந் தன்று" (முதுமொழிக்காஞ்சி.நல்கூர்ந்தபத்து .1)**

என்ற பாடலின் மூலம் காணமுடிகின்றது . குடிமக்களைக் காக்க விரும்பிய அரசன் முறைப்படி நடத்தலையே விரும்புவான்அவ்வ ாறே ஆட்சியும் புரிவான் என்பதனை உணர்த்துமாறு,

***"ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்" (முதுமொழிக்காஞ்சிதண்டாப்பத்து...9)***

என்ற முதுமொழிக் காஞ்சியின் பாடல் வரியின் பொருண்மையாவது, அரசனது பாதுகாவலால் விளையும் குடிமக்களின் இன்பத்தை உணர்த்துவதற்காக அரசன் முறைப்படி நடுநிலைமையோடு அரசு புரிதல் வேண்டுமென்று வற்புறுத்தும் விதமாக அமைந்துள்ளது என்பதனை மேற்கண்ட பாடல் விளக்குகின்றது.

## முடிவுரை

அரசு என்பது ஒரு நாட்டை அல்லது மாநிலத்தை நிர்வகிக்கும் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட அமைப்பு ஆகும்அரசியல் என்பது ஆட்சி ., அதிகாரம் பற்றிய கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் ஆகும்வரிவிதித்தல் ., சட்டங்களை இயற்றி அவற்றின் வழி நடக்கச்செய்தல், தண்டித்தல் முதலானவை அரசின் பணிகளாகும்.

மனிதகுல வரலாற்றில் குடியாட்சி, சனநாயக ஆட்சி, கும்பலாட்சி, செல்வராட்சி, சமயத்தவராட்சி, சாதி ஆட்சி, குடிகோன் ஆட்சி, தனிவல்லாட்சி உள்ளிட்ட பல்வேறு ஆட்சிமுறைகள் இருந்தாலும், சங்கம் மருவிய காலத்தில் சிறுகுழுவாட்சி மற்றும் கோனாட்சி நிலைப்பெற்றிருந்தமையை அறியமுடிகிறது.

திருக்குறள் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறும் உடையதே அரசு எனப்படுகிறதுபொரு .ள் வரும் வழிகளை உண்டாக்குதலும், பொருளை தொகுத்தலும், காத்தலும், தக்க செலவினங்களுக்குச் செலவிடுதல் போன்ற செயல்பாட்டு அம்சங்களை செய்பவரே வல்லமையான அரசரெனவும், பசி, பிணி பகை இல்லாமல் இருப்பதே சிறந்த நாடெனவும், குடிகளைக் காத்து, குற்றம் கடிதல் வேந்தன் தொழில் எனவும், நீதியுரைக்கும் பொழுது பாரபட்சம் பாராது செங்கோன்மை செலுத்துவதே அரசநெறிமுறை எனவும், அவ்வாறு முறை செய்யும் மன்னவனே மக்களுக்கு இறைவனென்று திருக்குறள் எடுத்துரைத்துள்ளது.

நாலடியார், அரசரரிடத்தே உள்ள செல்வத்தை நுகரவேண்டுமானால் அவர்களிடத்தே நெருங்கிப் பழகுதல் வேண்டும் என்று குறிப்பிடுகிறதுதிருக்குறளும் நாலடியாரும் ஒரு சேர . வைத்து எண்ணப்பட்டாலும் அரசியல் குறித்த விரிவான கருத்தாக்கங்கள் திருக்குறளைப் .போல் நாலடியாரில் பெரும்பான்மையாக சொல்லப்படவில்லை

பழமொழிநானூறு அரசன் நடுநிலை தவறிய நீதி சொல்வானேயானால் தாய் தன் மார்பகத்தில் ஒருபக்கம் நீரொழுகி மறுபக்கம் பால் ஒழுகித் தரும் வஞ்சனைக்கு நிகரானது எனவும், குடிமக்களைத் துன்புறுத்தும் அரசன் கூற்றுவன் எனவும், அரசன் கல்வியறிவு உடையவனாக இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்துகிறதுசமுதாயத்தில் முக்கிய கூறாகத் . திகழும் அரசன், அமைச்சன், படைவீரர், பகைத்திறம், மன்னரைச் சார்ந்திருப்பவர்களின் நிலைப்பாடுகள் போன்ற பல அரசியல் குறித்த பதிவுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன . மக்களின் வழக்குகளை ஆலோசித்து நீதி வழங்கும் வழக்கு மன்றங்கள் அரசவையில் வரி வசூலிப்பு முறையில் விதிமுறைகள் பின .இருந்துள்ளனபற்றப்பட்டுள்ளனநிலவரி .,

சுங்கவரி, நீர் வழி வரி போன்ற பல வகையான வரிகள் மக்களிடம் பொருளாகப் பெறப்பட்டுள்ளன.அரசியல் குறித்த பதிவுகள் இந்நூலில் மிகுதியாகப் பதிவுசெய்துள்ளன .

நான்மணிக்கடிகை, அரசனின் செங்கோல் ஆட்சியால் நாடு நலம்பெறும் எனவும், மக்களைத் துன்புறுத்தாத அரசாட்சியே மக்களுக்குத் தேவையெனவும், தாய்ப்பாலை எண்ணி வாழும் குழந்தைகள் போல செங்கோலாட்சி அரசை நோக்கியே மக்களும் வாழ்வர் எனவும், யாரிடத்தும் ஒருசார்புடைய கண்ணோட்டம் இல்லாமல் ஆள்வது தேவையெனவும் வலியுறுத்துகிறதுசங்ககால போர் முறையிலும் ., அரசியல் செலுத்தும் முறைமையிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நான்மணிக்கடிகையில் இல்லைஇக்கால அரசியல் . முடியாட்சியாகவும், குடியாட்சியாகவும், குடிமக்களே அரச அங்கங்களாகவும் கருதப்பட்டுள்ளனர்சங்ககாலம் போன்றே அமைச்சர் ., ஒற்றர், தூதுவர், படைவீரர் போன்ற அமைப்புகளும், நாற்படைகளின் சிறப்பு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளனஆனால் ., போர்முறைகள், படைக்கலன்கள், போரிடும் முறை, போரால் ஏற்பட்ட பெரும் அழிவு, வெற்றியால் பெற்ற பெரு மகிழ்ச்சி போன்ற கருத்தாடல்கள் போதுமான அளவு இந்நூலில் இடம்பெறவில்லை .

திரிகடுகம் என்னும் அறநூலானது குடிமக்கள், அமைச்சர்கள், காக்கும் காவல் தொழில் இம்மூன்றும் வேந்தனுக்கு வேண்டும் எனவும், ஓர்ந்து முறைநிலை கோடா அரசனே உலகம் எனவும், குடிமக்களைத் துன்புறுத்தும் அரசாட்சியில் மழை பெய்யாது எனவும், உதவுதல், உறவினர்களை ஆதரித்தல், இனிய சொற்களால் இனம் திரட்டுதல் இவை இளவரசனின் தொழில்கள் எனவும், மன்னருக்குத் துணைநிற்றல், வருமுன் காத்தலும், புலனடக்கலும், ஒற்றறிந்து அதன் படி நடத்தலும் அமைச்சர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் என அறிவுறுத்தியுள்ளதுமேலும் ., திண்மையான காவலுடைய நாட்டினைப் பெற்றவனாகவும், இளையோரை இன்சொற்களால் தம் படைகளில் திரட்டும் முயற்சியுடையோராகவும், நாட்டில் பொருளாதாரச் சீரழிவு ஏற்படாமலிருக்க அரசக் கருவூலத்தில் மக்களிடம் முறையாகப் பெற்ற பொருட்களை சேமிக்கும் வழக்கம் உடையவனாகவும், குடிமக்களில் சிறை செல்லாதவர்கள் உலகமெனவும், பகைவர்கள் எந்நிலையிலும் பகைவர்களே எனவும், ஒற்றாளர்களை தீயோர் என இகழும் வழக்கம் அக்காலச் சமூகச் சூழலில் நிலவியிருந்தாகவும் திரிகடுகத்தில் முறையாகப் பாடல்கள் தோறும் எடுத்துரைத்துள்ளன.

சிறுபஞ்சமூலம், நற்பண்புகளுடைய நாடு அமிர்தம் போன்றது எனவும், மக்களை வருத்தாமையே மன்னனுக்கு அழகு எனவும், வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயரும் எனவும், சிறைவாசம் புரிவோர், வலிமை இழந்தவர்கள், நாட்டைவிட்டுப் போய்த் தளர்ந்தவர், நோன்புடையவர், பத்தியத்தில் இருப்பவர் ஆகியோருக்குக் கொடுத்து உதவுபவன் மன்னராகப் பிறப்பவர் என்ற கருத்தாக்கத்தை மக்கள் மத்தியில் வலியுறுத்தியுள்ளதுமேலும் ., சிறுபஞ்சமூலம் ஒரு சமயநூல் என்பதால் இதில் காணப்படும் அரசியல் குறித்த பதிவுகள் யாவும் சமய அடிப்படையிலேயே எடுத்துரைக்கப்பட்டுள்ளதுபொருளுடைமை ., போகமுடைமை,

அஞ்சாமை, அருளுடைமை, அறமுடைமை போன்ற ஐந்து குணங்களையும் பெற்றிருப்பவர்கள் அரசனுக்குக் காரியம் ஆற்றும் தகுதியுடையவர்களாகவும், கலைகள் வளர்ச்சியடையும் நாட்டிலே பசியும், கொடுங்கோல் ஆட்சியும் நிகழவில்லை எனவும் உறுதியாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஆசாரக்கோவையில், அரசனைக் கடவுளாகத் தொழுவதே அறம் எனவும், அரசருக்குக் கட்டுப்பட்டு நடத்தல் நல்லறிவாளர் செயலெனவும், வரியை மறக்காமல் செலுத்துதல், அரசருக்கு நிகராக அலங்காரம் செய்யாமை, மன்னர் அவையிடையே வேறொருவருடன் பழகாமை மக்களின் குணங்கள் எனவும், அரசினை வெறுக்காமலும், கோல் சொல்லாமலும், எதிரில் நிற்காமலும், குறையைச் சொல்லாமலும், நன்மையை யாம் அறிவோம் என்று சொல்லாமலும், மறுத்துப் பேசாமல் இருப்பவர்களாகவும், உமிழ்தல், உயர்வான ஆசனத்தில் அமர்தல், தாம்பூலம் போடுதல், உறங்குதல், வெடிச்சிரிப்பு சிரித்தல், கொட்டாவி விடுதல், தும்முதல், தற்புகழ்ச்சி பேசுதல் போன்ற எதையும் அரசன் முன் செய்யக்கூடாதவை எனவும், அரசனுடன் கூத்துக்களியாட்டம், அந்தப்புரம் ஆகியவற்றிற்குச் சான்றோர்கள் செல்லமாட்டார்கள் எனவும், அரசத்தொழில் செய்பவனுக்கு ஆசாரத்திலிருந்து விலக்கு எனவும் அரசியல் குறித்த கருத்தாக்கங்கள் ஆசாரக்கோவையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

குடிமக்களைக் காத்தல், கல்வி கேள்விகளில் புலமையாயிருத்தல், வஞ்சனை சோம்பல் முதலியன விடுத்தல், புலனடக்கம் ஆகியன அமைச்சனுக்குரிய தகுதிகள் எனவும், வறியவர், துறவி, விருந்தினர், சான்றோர் போன்றோருக்கு உணவளிப்பவன் மறுபிறவியில் அரசானாவான் எனவும், உயிர்க்கொலை, கொல்லுபவனுக்கு உடன்படாமை, ஊன் உண்ணாமை போன்றவற்றை கடைபிடிப்பவன் உலகத்தை வெல்வான் எனவும், வழிபடுதலும், இல்வாழ்க்கையில் நீங்காமலும், தீயவை செய்யாமை, கள்ளாமை போன்ற இவற்றை செய்பவன் பகைவரை வென்று அரசனாவான் எனவும், வீடு, கண், செல்வம், நெல், பசுக்கூட்டம் போன்றவற்றை இழந்தவருக்கு உணவளித்தவர் மன்னராய் வாழ்வார் என்பது போன்ற அரசியல் கருத்தாக்கங்களை ஏலாதி என்னும் அறநூல் உருவாக்கியுள்ளது .

இன்னாநாற்பது, குடிமக்களைக் காப்பாற்றாத வேந்தனால் துன்பம் வரும் எனவும், கொடுங்கோல் ஆட்சிபுரியும் மன்னனின் கீழ் வாழ்தல் துன்பத்திலும் பெருந்துன்பம் எனவும், நீதி தவரும் ஆட்சி துன்பமுடையது எனவும், வீரமில்லா மன்னன் போர்க்களம் புகுவது துன்பம் எனவும் அரசனுக்கு அறிவுரைக்கிறது.

யானைப்படை கொண்டிருத்தல், படையை ஆளுதல், மக்களிடத்தே அன்புடையவனாய் இருத்தல், செங்கோலாட்சி புரிதல் ஆகியவை அரசனுக்கு இனியவை எனவும், அன்பில்லாத அரசனுடைய நாட்டில் வாழாமை குடிகளுக்கு இனியதெனவும், ஆராய்ந்து நடுநிலையோடு தண்டித்தலும் வேந்தருக்கு இனியதெனவும் அரசியல் குறித்த கருத்தாக்கங்களை இனியவை நாற்பது என்னும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

முதுமொழிக்காஞ்சி, நடுநிலைமையற்ற அரசனது நாடு வறுமையில் வாடும் எனவும், குடிகளைக் காக்க விரும்பும் அரசன் முறைப்படி ஆட்சிபுரிவான் எனவும் அரசியல் குறித்த கருத்துக்களை எடுத்துரைப்பதில் ஓரளவேனும் நிலைப்பெற்றுள்ளது எனலாம்.

குடி, அரசன், அமைச்சர், நாடு எப்படி இருக்கவேண்டும் எனப் பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களை இயற்றிய புலவர்கள் தாம் எடுத்துரைக்க விரும்பியவற்றை, மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அரசியல் அறங்களையும், அவை குறித்த கருத்தாக்கங்களையும் அறஇலக்கிய காலப்புலவர்களால் வலியுறுத்தப்பட்டு அக்கால சமூகத்தினரிடையே இக்கருத்தாக்கங்களையெல்லாம் நிலைப்பெறச் செய்ய முயன்றுள்ளனர் என மேற்கண்ட ஆய்வுத்தரவுகளின் வழி அறியமுடிகிறது.

## பார்வை நூல்கள்


[1] இராஇராசமாணிக்கம்., பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (மூலமும் உரையும்கழக ( வெளியீடு, திருநெல்வேல்வேலி, சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்., சென்னை . முதற்பதிப்பு1947, இந்தியா.

[2] டிகே.. இரவீந்திரன், தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம், முதற்பதிப்பு - 2016, விகடன் பிரசுரம், சென்னை, இந்தியா.

[3] தி. முருகரத்தினம், வள்ளுவர் வகுத்த அரசியல், திருக்குறள் ஆய்வக வெளியீடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1997, இந்தியா.

[4] வப.சு.. மாணிக்கனார், திருக்குறள் தெளிவுரை, முதற்பதிப்பு - 2007, தமிழ் நிலையம், சென்னை, இந்தியா.

[5] கணபதி இளங்கோ, பண்டைத் தமிழர் வாழ்வியல், முதற்பதிப்பு - 2014, பாவை பதிப்பகம் வெளியீடு, சென்னை, இந்தியா.

[6] கேகே.. பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், முதற்பதிப்பு - 2000, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா.

[7] எஸ். ராமகிருஷ்ணன், திருக்குறள் ஒரு சமுதாயப் பார்வை, முதற்பதிப்பு - 1980, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, இந்தியா.

[8] கார்த்திகேசு சிவத்தம்பி , பண்டையத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, முதற்பதிப்பு - 2013, மக்கள் வெளியீடு, இந்தியா.

[9] ஆ. சீனிவாசன், அரசியல் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம், பரல்கள் ஆய்வுக் கட்டுரைத் - தொகுதி, தமிழ் ஆய்வாளர் மன்றம், டிசம்பர் - 1992, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, இந்தியா.

[10] ப. கதிரவன், கீழ்க்கணக்கு அறநூல்களில் காணலாகும் ஒழுக்கத்தின் மேன்மை, செம்புலம் பன்னாட்டுத் தமிழாராய -்ச்சிக் காலாண்டிதழ், நவம்பர் - 2016, இந்தியா.

[11] ப. தமிழ்க்கனி, திருக்குறள் நாலடியார் கூறும் அறமே செல்வம், செம்புலம் - பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ், நவம்பர் - 2016, இந்தியா..
[12] பெரியசாமி தூரன், ம கலைக்களஞ்சியம் தொகுதி.பா.- 6' முதற்பதிப்பு - 1959, தமிழ் வளர்ச்சிக்கழகம் சென்னை, இந்தியா.
[13] தெ. பாலசுப்பிரமணியம், வாழ்வியற் களஞ்சியம் தொகுதி - 11, முதற்பதிப்பு - 1991, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா.
[14] கதிரவேல்பிள்ளை, கதிரவேல் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி, முதல் தொகுதி அ முதல் ஔ வரை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுமதிப்பு - 1998, இந்தியா.
[15] கதிரவேல்பிள்ளை, 'கதிரவேல் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி, இரண்டாம் தொகுதி க முதல் தன் வரை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,மறுமதிப்பு - 1998, இந்தியா.
[16] கதிரவேல்பிள்ளை, கதிரவேல் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி, மூன்றாம் தொகுதி தன் முதல் வெள வரை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுமதிப்பு - 1998, இந்தியா.

## References

[1] R. Rasamanikam, (1947), Eighteen Lesser Texts (Origin and Text), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, India.
[2] T.K. Ravindran, (2016), Kalabhra Dynasty duration in Tamil History, Vikadan Press, Chennai, First Edition. India.
[3] T. Murugarathinam, (1997), Political Evluation by Valluvar, Thirukkural Research Publication, Madurai Kamaraj University, Madurai, India.
[4] V.S.P. Manikanar, (2007), A brief explanation of Thirukkural, TamilNilayam, Chennai, India.
[5] Ganapathy Ilango, (2014), Ancient Tamil People life, First Edition, Pavai Publishing, Chennai, India.
[6] K.K. Pillai, (2000), History and People's Culture of Tamilnadu, First Edition, World Tamil Research Company, Chennai, India.
[7] S. Ramakrishnan, (1980), A community view of Thirukural, First Edition, Meenakshi Book Station, Madurai, India.
[8] Karthikesu Sivathambi, (2013), A historical understanding towards an Ancient Tamil Society, First Edition, Makkal Publications, India.
[9] A. Srinivasan, (1992), Political Review- An Introduction, Paralgal- Research Article Volume, Tamil Researcher Foundation, Madurai Kamaraj University, Madurai, India.
[10] B. Kathiravan, The superiority of morality in the Lesser Texts, Sembulam, International Tamil Quarterly Journal, (2016).
[11] B. Tamilkani, Dhamma is Wealth - Thirukkural and Naladiyar's views, Sembulam, International Tamil Quarterly Journal, (2016).
[12] Periyasamy Dhooran, (1959), Encyclopedia Volume -6, First Edition, Tamil Development Corporation, Chennai, India.

[13] T. Balasubramaniyam, (1991), Biological Repository Volume – 11, First Edition, Tamil University, Tanjore, India.

[14] Kathiravel Pillai, Tamil Vocabulary, First Volume, World Tamil research company, revaluation in 1998, Chennai, India.

[15] Kathiravel Pillai, Tamil Vocabulary, Second Volume, World Tamil research company, revaluation in 1998, Chennai, India.

[16] Kathiravel Pillai, Tamil Vocabulary, Third Volume, World Tamil research company, revaluation in 1998, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License